விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 12 சனிக்கிழமை (24.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 067

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## வவுனியா பட்டாணிசூர் பகுதியில் வீடு புகுந்து பாரிய கொள்ளை

### 5 இலட்சம் பெறுமதியான நகை அபகரிப்பு

(மல்லாவி)

வவுனியா நெளுக்குளம்பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பட்டாணி சூர் இரண்டாம் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில்வீட்டார் வெளியே சென்றிருந்த நிலையில் வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 9 பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ள திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக நெளுக்குளம் பொலிஸ் 24

## உருளைக்கிழங்கிற்கான வரி 30ரூபாயால் உயர்வு

(கொழும்பு)



இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கிற்கான விசேட வர்த்தக வரி நள்ளிரவு முதல் 30 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரையில் ஒரு ரூபா 24

## இந்தியா வருமாறு மைத்திரிக்கு அழைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம் திகதி புது டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, சர்வதேச சூரியசக்தி உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 24

## ஐ.தே.க அமைச்சர்களுடன் பிரதமர் ரணில் சந்திப்பு

(கொழும்பு)

அரசின் அபிவிருத்தித்திட்ட முன்மொழிவுகளை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களை நேற்று அழைத்து அந்தக்கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் 23

## ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்ட மூவர்

### யாழில் நேற்றைய தினம் மரணம்

(யாழ்ப்பாணம்)

ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர்கள் இருவர் சுவாசிக்க முடியாமல் உயிரிழந்ததுடன், நோயின் தாக்கத்தை தாங்கமுடியாது இளைப்பாறிய ஆசி 23

## நல்லாட்சி அரசு மீது நம்பிக்கை இல்லை

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் மூன்று வருடங்களாக மேற்கொள்ள முடியாத அபிவிருத்தியை எதிர்வரும் இரண்டு வருடங்களில் மேற்கொள்ளும் என எதிர் 23

### தொங்குநிலையில் காணப்படும் உள்ளூராட்சி சபைகளில் தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்புடன்

## ஆட்சி அமைக்க கூட்டமைப்பு முடிவு

**(கொழும்பு) வடக்கில் ஆட்சி அமைக்க முடியாமல் தொங்குநிலையில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஏனைய தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்பை பெற்று ஆட்சி அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.**

உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிந்துள்ள நிலையில், சபைகளில் நிர்வாகத்தினை மேற்கொள்வது தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒன்றிணைந்து கலந்துரையாடியிருந்தன.

குறித்த கலந்துரையாடல் கொழும்பில் நேற்று மாலை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனின் உத்தி 23

## கச்சதீவு செல்ல படகு இல்லை

### நெருக்கடிக்குள்ளான பக்தர்கள்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவுக்கு செல்லும் யாத்திரிகர்களுக்கான படகுச் சேவை இன்மை காரணமாக இறங்குதுறையில் பெரும் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது. கச்சதீவு புனித அந் 23

## அத்துமீறி நுழையும் மீனவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்காலத்தில் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் வெளிநாட்டு மீனவர்களை கைது செய்து அவர்களது படகுகள் கைப்பற்றப்படும் எனவும் அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடி 23

## புதிய அமைச்சரவை மாற்றத்தால் ஐ.தே.கட்சிக்குள் பாரிய குழப்பம்

### கட்சி பிளவுபடக்கூடிய அபாயம்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது அமைச்சரவை மாற்றம் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி பெரும் உட்கட்சிப் பிளவுகளை எதிர்கொண்டுள்ளது.

தற்போதைய நிலையில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட அமைச்சர்களுக்கு எந்தக் கட்டத்திலும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படமாட்டாது 23

### சித்தமருத்துவம் தொடர்பில்

## இந்திய - இலங்கை ஒப்பந்தம் வேண்டும்

(யாழ்ப்பாணம்)

சித்த மருத்துவத்துறை தொடர்பில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்திய ஆயுஸ் அமைச்சின் சித்த மருத்துவ ஆய்வு சபை வைத்தியர் ஜி.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

சித்த மருத்துவத்துறையின் முதலாவது சர்வதேச ஆய்வு 23

## தாயின் பணத்தை திருடிய மகன் பொலிஸாரால் கைது

### விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புத்தூர் கிழக்குப் பகுதியில் மகன் ஒருவர் தனது தாயின் ஒருதொகைப் பணத்தினைத் திருடிய சம்பவம் அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது.

தனது தாயின் பணத்தை திருடிய மகனை தாம் கைதுசெய்துள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந்த 23

## அமைச்சரவை மாற்றம் ஞாயிறன்று இடம்பெறும்

### அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவிப்பு

(கொழும்பு)

அமைச்சரவை மாற்றம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று களுத்துறை வைத்தியசாலையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தலில் 23

## அரசாங்க கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தப்படும்

### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றம் மட்டுமல்லாது அரசாங்கத்தின் கொள்கை ரீதியான மாற்றங்களும் ஏற்படுத்தப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள் 23

## அரசின் மீதான எதிர்ப்பு தேர்தலில் வெளிப்பட்டுள்ளது

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் மீதான தமது எதிர்ப்பை உள்ளூராட்சி மன்ற தேர்தலின் ஊடாக மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்து 23



### புதிய அமைச்சரவையையடுத்து

## முக்கிய அமைச்சர்கள் இருவர் பதவி துறப்பு

(கொழும்பு)

மேற்கொள்ளப்படவுள்ள புதிய அமைச்சரவை மாற்றத்தின் போது சுதந்திரக்கட்சியின் மூத்த அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த மற்றும் தயாசிறி ஜெயசேகர ஆகியோர் தாம் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என ஜனாதி பதி மைத்திரிபால 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

## சின்னத்தம்பி ஜெயராசா

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி சதீஸ் ஜெகதா அவர்களின் அன்புத் தந்தையார் சின்னத்தம்பி ஜெயராசா அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

(2891)

இணுவில் இந்துவின்

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1944 - 11 - 13 | 2018 - 02 - 22 |



## திரு.துரைராஜா சிவராஜா

எமது கல்லூரி நூலக உதவியாளர் செல்வி.சிவராஜா ஞானலோஜினியின் அன்புத் தந்தையும், எமது பாடசாலைப் பழைய மாணவனும், நம்பிக்கை நிதிய உறுப்பினருமான திரு.துரைராஜா சிவராஜா அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இணுவில் இந்துக் கல்லூரி
இணுவில்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
(ஆசிரியர் நலன்புரிச் சங்கம்)

(2892)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி பாவனைக்கு உட்பட்ட பொருட்கள் தொடர்பான ஏலக்கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையில் பாவனைக்கு உட்பட்ட பொருட்களை ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலம் 2018/03/13 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும். 2018/02/26 தொடக்கம் 2018/03/12 வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணிவரை பொருட்களை பார்வையிடலாம்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விவைப்புப் பணம் ரூபா 100.00ஐ செலுத்திப் பற்றுச்சீட்டினை 2018/02/26 ஆம் திகதி தொடக்கம் 2018/03/13 ஆம் திகதி 10.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**அ.வினோராஜ்,**
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை.
கரவெட்டி.
24/02/2018



# நன்றிகள்... நன்றிகள்...

எம் நேசத்துக்குரிய எம் தேசத்து மக்களே...
எமது குறுகிய கால அரசியல் பயணத்திற்கு ஆதரவு தந்து நம் மீது நம்பிக்கை கொண்டு வாக்களித்த அனைவருக்கும் எமது இனிய நன்றிகள்

**குறள்:** ஞாலம் கருதினும் கைகூடுங் காலம்.
கருதி இடத்தாற் செயின்...

**பொருள்:** காலத்தையும் இடத்தின் தன்மையும் அறிந்து செயல் மேற்கொண்டால் உலகத்தையே வெல்லலாம்.

இலங்கை தேசம் தாமரை மொட்டில் சங்கமித்த இவ் வேளையில் எமது மக்களின் ஆக்க பூர்வமான நல் நிலைமைகள் பெற்றிட நாம் அனைவரும் இவ் வெற்றியில் பங்கெடுப்போம்.
வளர்ச்சி, அரசியல் உரிமை, அனைத்து அபிவிருத்தி, வேலை வாய்ப்பு, வறுமையில்லா பொருளாதாரம், எழுச்சியான உள்ளூர் கட்டமைப்பு, எம் தேசம் எங்கும் தடையில்லாமல் எம் மக்கள் வளமாக வாழ்வது இதுவே எம் கனவு. முயல்வோம்; வெல்வோம்.

பருத்தித்துறை பிரதேச இணைப்பாளர்
க.ஜெயச்சந்தர் (அப்பன்)
ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி

(2894)

# அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பிரித்தானியாவில் வசிக்கும் புலம்பெயர்ந்த பெரும்பான்மையின மக்களால், பிரித்தானிய அரசாங்கத்துக்கு எதிராக இன்றைய தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக அங்கு செயற்படும் பல்வேறு தேசப்பற்று அமைப்புகள் ஒன்றிணைந்திருப்பதாக தெரியவருகிறது.

பிரித்தானியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் பிரியங்க பெர்னாண்டோ, புலம்பெயர் தமிழர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தின் உண்மையறியாது பிரித்தானிய அரசாங்கமும், சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்பட்டுள்ளதாக தெரிவித்து, அதற்கு எதிர்ப்பைக் காட்டும் வகையில், பெரும்பான்மையின மக்களால் பிரித்தானிய பிரதமர் அலுவலகத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ம)

# மாவா வைத்திருந்த இருவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

மாவா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட இருவருக்கு தலா 2 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கோப்பாய் பொலிஸார் குறித்த நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.


இதன்போது இருவரும் தம் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து அவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ம)

## விற்பனைக்கு

ஆலயத்தில் பாவித்த பனை மரங்கள், தீராந்திகள் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

**தொடர்பு:0769635621**

# மரண அறிவித்தல்



# தம்பிராசா தவராசா

(இளைப்பாறிய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்-தீவக வலயம், தலைவர்-புங்குடுதீவு, பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி ஆலய தர்மகர்த்தா சபை, தலைவர்-புங்குடுதீவு இறுப்பிட்டி ஐங்கரன் சன சமூக நிலையம்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.11.1945 | 21.02.2018 |

*புங்குடுதீவு 05ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 06ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா தவராசா 21.02.2018 ஆம் திகதி புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா (ஓய்வுபெற்ற இலிகிதர்-புங்குடுதீவு), காமாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற அதிபர்-புங்குடுதீவு) மற்றும் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மீனலோசனியின் அன்புக் கணவரும், சகிலா, கார்த்திகா, ஜெயகாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீபன், கஜேந்திரன், காயத்திரி ஆகியோரின் அருமை மாமனாரும், யோகேஸ்வரி, சங்கரராசா, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சர்வலோசனி, காலஞ்சென்ற தேவதாசன் மற்றும் குகதாசன், கோகிலதாசன், குமாரதாசன், தியாகராசா, காலஞ்சென்ற சவுந்தராதேவி மற்றும் துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கலன்சூரியவின் அன்புச் சகலனும், ஜெகதீஸ்வரி (விஜயா), றொமானா, சந்திரிகா, கிரியா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், சமீதா, நிலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2018) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 07 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று 9 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக புங்குடுதீவு கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**கலாசாலை வீதி, 04ஆம் ஒழுங்கை,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.** (2896)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# அதிகரித்துவரும் தொற்றுநோய்களை கட்டுப்படுத்த கடுமையான சட்டங்களை அரசு இயற்ற வேண்டும்

## வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு





(யாழ்ப்பாணம்)

எமது நாட்டில் அதிகரித்துவரும் தொற்று நோய்களை கட்டுப்படுத்த மேலை நாடுகளுக்கு ஒப்பான சில தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கடுமையான சட்டங்களை மத்திய அரசு எதிர்காலத்தில் இயற்ற வேண்டியிருக்கும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.குருநகர் பிரதேச வைத்தியசாலை கட்ட திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ்.மக்களைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை எமக்குக் கிடைக்கப்பெற்றிருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ள போதும் வேறு அரசாங்க வைத்தியசாலைகள் குறைவாகக் காணப்படுவதால் பல்லாயிரக்கணக்கான நோயாளர்கள் தினமும் யாழ்.போதனா வைத்தியசாலையை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது.

பாரிய நோய்த்தாக்கங்களுக்கு உள்ளானவர்களைப் போதனா வைத்தியசாலை கவனித்துக்கொள்ள ஏனையவர்கள் இவ்வாறான சிறிய வைத்தியசாலைகளுக்கு செல்வதன் மூலம் போதனா வைத்தியசாலையின் நெருக்கடிகள் குறைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான தமிழ் மாணவர்கள் மருத்துவ பீடங்களிலிருந்து வைத்திய கலாநிதிகளாக வெளிவந்து கொண்டிருக்கின்ற போதும் இன்னும் வைத்தியர்களின் பற்றாக்குறை வட மாகாணத்தில் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

மக்கள் நகரத்தை அண்டியுள்ள பகுதிகளில் குடியேறி வசிக்க விரும்புவதால் நகர்ப்புறத்தை அண்டிய பகுதிகள் சன நெருக்கம் கூடிய பகுதிகளாக உருவாக்கப்படுகின்றன. இதனால் இப்பகுதிகளில் நோய்த்தாக்கங்கள் குறிப்பாக தொற்றுநோய்த்தாக்கங்கள் விரைவாக பரவுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம்.

எமது யாழ்.மாநகரப்பகுதியைச் சுத்தமாக்கி ஒரு சுத்தமான யாழ்ப்பாண நகரமாக மாற்றுவதற்கு யாழ்.மாநகர சபை, பொது அமைப்புக்கள், படைத்தரப்புக்கள் மற்றும் இன்னோரன்ன தன்னார்வலர்களின் பங்களிப்புக்கள் நல்கப்படுகின்ற போதும் எதிர்பார்த்த முன்னேற்றம் இதுவரை அவதானிக்கப்படவில்லை.

ஒவ்வொரு மனிதனும் தனது வீடு, தனது சூழல் ஆகியவற்றை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பேணப் பழகிக் கொண்டால் நாடே சுத்தமாகும்.

மனித சமூகம் அறிவியல் ரீதியாக வளர்ச்சியடைந்துள்ள நிலையில் நோய்க் கிருமிகளும் தம் பங்கிற்கு மேலும் மேலும் வளர்ச்சியுற்று எம் மக்களைப் பல்வேறு புதிய புதிய விதமான நோய்களூடாக ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு நாளும் புதிய புதிய நோய்களின் தாக்கங்கள் பற்றியும் அவற்றில் இருந்து பொதுமக்களை பாதுகாத்துக் கொள்கின்ற வழிமுறைகள் பற்றியும் மருத்துவ அதிகாரிகளும் மருந்து ஆய்வு நிறுவனங்களும் ஆய்வுகளை நடத்திய வண்ணமே உள்ளனர். எந்த அளவுக்கு அவர்கள் முயற்சிகள் பலனளித்துள்ளன என்பது கேள்விக்குரிய விடயமாக இருக்கின்றது.

இன்று நுளம்புகளினால் பெருக்கப்படுகின்ற டெங்கு நோய்த் தாக்கம் எம் நாட்டில் கூடுதலாகக் காணப்படுகின்றது. சில காலங்களுக்கு முன்னர் மலேரியா தொற்று மிக அதிகமாகக் காணப்பட்டது. யானைக்கால் நோயும் காணப்பட்டது. ஆனால் சுகாதார திணைக்களத்தின் கடுமையான நோய்த்தடுப்பு நடவடிக்கைகளின் பின்னர் மலேரியாத் தொற்று மற்றும் யானைக்கால் தொற்று ஆகியன பூச்சிய நிலைமைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது மீண்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மலேரியாத் தாக்கம் பற்றிய செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இவை பற்றி ஆராய்ந்ததில் இந் நோய்த் தொற்றுகளுக்கான நோய்க் காவிகளாக இந்தியப் பயணத்தை முடித்துவிட்டு நாடு திரும்புபவர்களே அமைந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு தான் மேலைத்தேயத்தவர்கள் தமது நாட்டிற்குள் பிரவேசிக்கின்ற அனைவரும் நோய்த் தடுப்பு ஊசி மருந்துகள் ஏற்றியிருக்க வேண்டும் என்றும் அதற்கும் மேலாக நோய்க் கிருமிகளை கொண்டு செல்லக் கூடிய உணவு வகைகள், தாவரங்கள், தானியங்கள் ஆகியவற்றை நாட்டிற்குள் கொண்டு செல்வதற்குத் தடையும் விதித்துள்ளார்கள்.

எனவே இங்கும் மேலை நாடுகளுக்கு ஒப்பான சில தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகக் கடுமையான சட்டங்களை மத்திய அரசு எதிர்காலத்தில் இயற்ற வேண்டியிருக்கும்.

முறையான மருத்துவக் கவனிப்புகள் இன்றி பல இன்னுயிர்கள் இழக்கப்படுகின்ற நிலைமைகளைக் கட்டுக்குள் கொண்டுவரவேண்டுமாயின் "வருமுன் காப்போம்" என்ற தொனிப் பொருளில் நாம் அனைவரும் இணைந்துகொண்டு சுகாதாரமாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் ஜி.குணசீலன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கே.சர்வேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் கே.நந்தகுமார், குருநகர் ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## கொழும்பில் பட்டப் பகலில்

# பாதாள உலகத் தலைவர் துப்பாக்கிச் சூட்டில் மரணம்

## அதிரடிப் படையினர் களத்தில்

(கொழும்பு)

கொழும்பு - வத்தளை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை பகல் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பிரபல பாதாள உலகத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தை அடுத்து பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுத் தலைவர்களில் பிரபல தலைவராக கருதப்படும் தடல்லகே மஞ்ஜு" என்ற நபரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவரை குறிவைத்து விசேட அதிரடிப் படையினர் நடத்திய தாக்குதலில் சந்தேக நபர் கொல்லப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் பாதாள உலகக்" குழுவினரது செயற்பாடுகளை தடுப்பதற்காக விசேட அதிரடிப் படையினரடங்கிய குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மகிந்த - மைத்திரிக்கு இடையில் அவசர தொலைபேசி உரையாடல்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்ற நிலையிலும், அமைச்சரவை மாற்றம் ஏற்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்ற நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் அவசர தொலைபேசி கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

தற்போதைய அரசியல் நிலவரங்கள் பற்றி இரு தலைவர்களும் கலந்துரையாடியிருப்பதாக அறியமுடிகின்றது.

சுதந்திரக் கட்சியின் தனியாட்சியை அமைக்குமாறு ஏற்கனவே ஜனாதிபதியிடம் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தி வந்த நிலையில் இந்த சந்திப்பு இடம்பெற்றிருப்பதோடு சுதந்திரக் கட்சியின் எதிர்கால நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் மாலை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (இ-7)

## ஜனாதிபதி மைத்திரியுடன் த.தே.கூட்டமைப்பு சந்திப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் பிற்பகல் சந்தித்துள்ளது.

இதன்போது தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்தும், அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள நிலையற்ற தன்மையை மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த பிரியங்கவுக்கு ஆசீர்வாதம் வழங்க காத்திருந்த பௌத்த பிக்குகள்

(கொழும்பு)

பிரித்தானியாவுக்கான இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்காக விமான நிலைய வளாகத்தில் காத்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்துள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தன்று பிரித்தானியாவில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களின் கழுத்தை அறுத்து விடுவேன் என பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ சமிக்ஞை காட்டியதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

அது குறித்து ஆராய பிரிகேடியர் இலங்கைக்கு அழைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் 12.30 மணியளவில் அவர் இலங்கையை வந்தடைந்தார்.

இவரை வரவேற்பதற்காக விமான நிலைய வளாகத்தில் சிங்கலே அமைப்பினர் மற்றும் பௌத்த பிக்குமார் காத்திருந்தனர்.

எனினும் இவர்களை சந்திக்க விடாமல் பிரியங்கவை வான் ஒன்றில் அழைத்துச் சென்றுள்ளனர். இதன்போது கருத்து தெரிவித்த பௌத்த தேரர்கள்.

பிரியங்க பெர்னாண்டோவுக்கு ஆசீர்வாதம் வழங்குவதற்காகவே இங்கு நாம் வருகை தந்திருந்தோம். ஆனால் எம்மை சந்திக்க விடாமல் அவரை கறுப்பு கண்ணாடி அடைக்கப்பட்ட வான் ஒன்றில் ஏற்றிச்சென்றார்கள்.

இவ்வாறு மறைத்து அழைத்துச் செல்லும் அளவுக்கு பிரியங்க பெர்னாண்டோ என்ன தவறு செய்தார் என தேரர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (இ-7)

# தொடரை வெல்வது யார்?

## இந்தியா - தென்னாபிரிக்கா இன்று கேப் டவுணில் இறுதி மோதல்



இந்திய-தென்னாபிரிக்க அணிகள் மோதும் 3ஆவது 'ரி20' போட்டி இன்று நடக்கிறது.

இறுதிப் போட்டி போல அமைந்த இப்போட்டியில் இந்தியா வென்றால், கிண்ணம் வெல்லலாம்.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, அங்கு டெஸ்ட் தொடரை 1-2 என இழந்தது. எனினும் ஒரு நாள் தொடரில் எழுச்சி பெற்ற இந்தியா, 5-1 என்ற கணக்கில் கிண்ணம் வென்று மிரட்டியது. அதேவேகத்துடன், 'ரி20' தொடரில் களமிறங்கியது.

முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற, அடுத்த போட்டியில் தென்னாபிரிக்க பதிலடி கொடுக்க, தொடர் தற்போது 1-1 என சமநிலையில் உள்ளது.

தொடரின் வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3ஆவது மற்றும் கடைசி 'ரி20' போட்டி கேப்டவுனில் இன்று நடக்கிறது.

இதற்கு முன் இங்கு இவ்வகை போட்டியில் இந்தியா விளையாடியது இல்லை.

**வருவாரா ராகுல்**

இத்தொடரில் ஒருமுறை (115 ஓட்.) தவிர, ஒட்டு மொத்தமாக ஏமாற்றிய ரோகித் சர்மாவுக்குப் பதில், ஷிகர் தவானுடன், லோகேஷ் ராகுலுக்கு வாய்ப்பு கொடுத்து பார்க்கலாம். நடுத்தர வரிசையில் இம்முறை ஹோலி, விழித்துக் கொள்வார் என நம்பலாம். ரெய்னா, மணிஷ் பாண்டே தங்களது தேர்வை நியாயப்படுத்தினர். அரைச் சதம் அடித்த 'சீனியர்' தோனியுடன் பாண்ட்யாவும் சற்று 'வேகம்' காட்டினால் இந்தியா மற்றொரு கிண்ணத்துடன் நாடு திரும்பலாம்.

**பந்துவீச்சு பிரச்சினை**

இந்திய அணிக்கு வேகப் பந்து வீச்சாளர் பும்ரா, வயிற்று தசைப்பகுதியில் ஏற்பட்ட சிக்கலால் அவதிப்படுகிறார். இவருக்கு மாற்றாக வந்த ஷர்துல் தாகூர் பரவாயில்லை. உனத்கட் (75 ஓட்., 2 விக்.,) இரு போட்டியிலும் ஓட்டங்களை வாரி வழங்கினார். 'சுழல்' வீரர் சகால் (103 ஓட்., 1 விக்.,) ஏமாற்றுவதால், இன்று அக்சர் படேல் வருவார் எனத் தெரிகிறது.

**கிளாசன் விளாசல்**

இந்திய 'சுழல்' பந்துவீச்சை சமாளிக்க சீனியர்களே திணறி வந்த நிலையில், 'புதிய வரவு' கிளாசன் ஒரு புரட்சியே செய்து விட்டார். இவர் சிறப்பாக செயல்பட்ட இரு போட்டிகளிலும் தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி கிடைத்தது. இன்றும் அணித் தலைவர் டுமினியுடன் இணைந்து தொல்லை கொடுக்கலாம். மற்றபடி மில்லர், பெகர்டியன், ஹென்ரிக்சும் கைகொடுக்க காத்திருக்கின்றனர்.

பந்துவீச்சில் ஜூனியர் டாலா, பேட்டர்சன் மீண்டும் தொல்லை கொடுப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. தென்னாபிரிக்க அணி இம்மைதானத்தில் விளையாடிய 8 'ரி20' போட்டிகளில் 5ல் தோற்றுள்ளது, இது இந்திய அணிக்கு சற்று சாதகமான விடயம்தான்.

**கிடைக்குமா 'இரண்டு'**

இன்று கேப்டவுனில் மாலை (4.30 மணி) மற்றும் இரவு (9.30 மணி) என இரண்டு 'ரி20' போட்டிகள் நடக்கவுள்ளன.

ஏற்கெனவே ஒருநாள் தொடரை 2-1 என வென்ற இந்திய பெண்கள் அணி இன்று சாதித்தால் இரண்டாவது கிண்ணம் ('ரி20') வென்று திரும்பலாம்.

இதேபோல, ஒருநாள் தொடரை 5-1 என வென்ற இந்திய ஆண்கள் அணி மூன்றாவது 'ரி20' போட்டியில் வென்றால் இரண்டாவது கிண்ணம் ('ரி20') கைப்பற்றி அசத்தலாம்.

**தண்ணீர்... தண்ணீர்**

கேப் டவுனில் கடுமையான தண்ணீர் பஞ்சம் நிலவுகிறது. 40 லட்சம் மக்கள் தொகை கொண்ட இந்நகரத்தில் நிலத்தடி நீரும் அதலபாதாளத்துக்கு சென்றுவிட்டது. இந்திய தொடர் தொடங்கும் போது, இங்குள்ள மக்கள் நாள் ஒன்றுக்கு 84 லீற்றர் தண்ணீர் மட்டும் தான் பயன்படுத்த வேண்டும் என்றனர்.

இங்குள்ள மிகப்பெரிய அணை 'தீவாட்டர்ஸ்குளுப்' முற்றிலும் வற்றிவிட்டது. இதனால் தற்போது நாள் ஒன்றுக்கு 25 லீற்றர் தண்ணீர்தான் தருகின்றனர். வெகுவிரைவில், இங்குள்ள கடைசி சொட்டு நீரும் தீர்ந்து போய், வரும் ஏப்ரல் 12 முதல் 'டே ஸீரோ' என்ற நிலை வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்று முதல், உலகின் முதல் வறண்ட நகரம் என்ற நிலையை அடையவுள்ளது.

கேப்டவுனில், இன்றைய வெப்பநிலை அதிகபட்சம் 17, குறைந்தபட்சம் 14 டிகிரி செல்சியசாக இருக்கும். மாலை சூரியன் மறைந்த பின், மேகமூட்டம் அதிகரிக்கும். இருப்பினும் மழை வர வாய்ப்பு இல்லை.

**ஆடுகளம் எப்படி**

கேப்டவுன் ஆடுகளம் வழக்கம் போல மந்தமாகத் தான் இருக்கும் எனத் தெரிகிறது. இங்கு நடந்த, 3 ஆவது ஒருநாள் போட்டியில், இந்திய 'சுழல்' வீரர்கள் சகால் (4), குல்தீப் (4) இணைந்து, 8 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இம்முறை, 'ரி20' என்பதால், ஓட்ட மழைக்கு வாய்ப்பு உள்ளது.

## வவுனியாவை வந்தடைந்த உலக சாதனை வீரன்



வவுனியாவை பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்து வரும் உலக சாதனை வீரன் சுரேஸ் ஜோஷிம் சமாதானத்தினை வலியுறுத்தி ஆரம்பித்த மரதன் ஓட்டம் நேற்று வவுனியாவை வந்தடைந்தது.

கனடாவில் இருந்து ஆரம்பித்த மரதன் நேற்று வவுனியா கூசைப்பிள்ளையார்குளத்தை வந்தடைந்தது.

ஏழ்மையின் சின்னமாகிய பனையின்பாளையை ஏந்தியவாறாக 72 நாட்டுக்கு 123 நாட்களில் சுமார் 4000 கிலோமீற்றர் ஓடிச்செல்லவுள்ள இப்பயணமானது நேற்று வவுனியாவில் இருந்து கிளிநொச்சி நோக்கி ஆரம்பித்திருந்த, இவ் மரதன் ஓட்ட மானது வவுனியா, மாங் குளம், கிளிநொச்சியூடாக யாழ்ப்பாணத்தை சென்று முடிவடையவுள்ளது.

நேற்று மாலை 3.00 மணிக்கு வந்தடைந்த இவ் உலக சாதனை வீரனுக்கு தமிழ் விருட்சம் அமைப்பினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதோடு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டதுடன் வவுனியா இளைஞர்கள் சிலரும் இப்பயணத்தில் இணைந்திருந்தனர். (ம- 250)

## துரத்துகிறது காயம்

## நம்பிக்கையில் தளராத லின்



தோள்பட்டை காயத்திற்காக அறுவை சிகிச்சை செய்ய வேண்டியதில்லை என மருத்துவர்கள் கூறியதால், ஐபிஎல் தொடரில் விளையாடும் நம்பிக்கையில் கிறிஸ் லின் உள்ளார்.

அவுஸ்திரேலியா அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கிறிஸ் லின்.

27 வயதாகும் இவர் தனது அதிரடி ஆட்டத்தால் பந்துவீச்சாளர்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர். ஆனால் அடிக்கடி காயம் அவரை அச்சுறுத்தி வருவதால் தொடர்ச்சியாக அணியில் இடம்பிடிக்க முடியாமல் உள்ளார்.

முத்தரப்பு ரி20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 21ஆம் திகதி ஆக்லாந்தில் நடைபெற்றது.

இப் போட்டியின்போது இவருக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதனால் கிறிஸ் லின் துடுப்பாட்டம் செய்யவில்லை.

நேற்று பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி20 கிரிக்கெட் தொடர் தொடங்கியது. இதில் இருந்து கிறிஸ் லின் விலகியுள்ளார்.

காயத்திற்காக அறுவை சிகிச்சை மேற்கொண்டால் ஏப்ரல் 7ஆம் திகதி தொடங்கும் ஐபிஎல் தொடரில் பங்கேற்க முடியாத சூழ்நிலை இருந்தது.

இந்நிலையில் கிறிஸ் லின் தோள்பட்டை காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்துகொள்ள தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் காயத்தில் இருந்து மீண்டும் ஐபிஎல் தொடரில் பங்கேற்பேன் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 9.5 கோடி ரூபாய் கொடுத்து ஏலம் எடுத்துள்ளது. மேலும், கேகேஆர் அணிக்கு தலைவராக தேர்வு செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

ஒருவேளை ஐபிஎல் தொடரில் பங்கேற்கவில்லை என்றால் 9.5 கோடி ரூபாய் அவருக்கு கிடைக்காது. கொல்கத்தா அணியில் சேர்ந்த பிறகு, ஒரு போட்டியில் கூட விளையாடாமல் விலகினால் பாதி பணம் கிடைக்கும். ஐபிஎல் போட்டியில் விளையாடினால் முழுத் தொகையையும் பெறுவார்.

கடந்த சீசனில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடிய கிறிஸ் லின் 50க்கும் மேல் சராசரி வைத்துள்ளார். ஸ்டிரைக் ரேட் 180 ஆகும்.

## 'அப்பா' புஜாரா



இந்திய டெஸ்ட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான புஜாரா - பூஜா தம்பதிக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

இந்திய டெஸ்ட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரராக இருப்பவர் புஜாரா. இவருக்கும் பூஜாவிற்கும் கடந்த 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் திருமணம் நடைபெற்றது.

இந்திய அணி ஜனவரி மாதம் தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் பங்கேற்ற புஜாரா, தனது மனைவியுடன் தென்னாபிரிக்கா சென்றிருந்தார். அங்கு மனைவியுடன் புத்தாண்டை கொண்டாடினார்.

அதன்போது "தனது மனைவி கர்ப்பிணியாக உள்ளார். விரைவில் எங்களுக்கு குழந்தை பிறக்க உள்ளது" என்று டுவிட்டரில் பதிவு செய்திருந்தார்.

தற்போது புஜாரா சவுராஷ்டிரா அணிக்காக விஜய் ஹசாரே டிரொபியில் விளையாடி வருகிறார். நேற்று பரோடா அணியை வீழ்த்தி சவுராஷ்டிரா இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்த சந்தோசத்தில் இருக்கும் புஜாராவிற்கு மற்றொரு இரட்டிப்பு சந்தோசம் ஏற்படும் வகையில் நேற்று பெண்குழந்தை பிறந்துள்ளது. இதை புஜாரா டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

இவருக்கு இந்திய வீரர்களான ஹர்பஜன், மனோஜ் திவாரி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# கிராமங்களில் வறுமை நிலை அதிகரிப்பதற்கு போதைப்பொருள் பாவனையே பிரதான காரணம்

## ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

குறைந்த வருமானங்களை உடைய மக்கள்போதைப்பொருள் பாவனைக்கு அதிகளவில் உட்படுதலே கிராமங்களில் வறுமை நிலை அதிகரிப்பதற்கு பிரதான காரணமாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார்.

எனவே இந்த சமூகப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு விசேட செயற்றிட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தல் அவசியம் என்பதுடன், சகல துறைகளின் பங்களிப்புடன் அரசாங்கம் தற்போது இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றதென ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முற்பகல் எம்பிலிபிட்டிய மகாவலி விளையாட்டரங்கில் இடம்பெற்ற "கிராமங்களை உருவாக்குவோம்" கிராமிய போதைப்பொருள் ஒழிப்பு செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்விலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைதியான தேசத்தை கட்டியெழுப்புவதற்காக கிராம மக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் "போதைப்பொருட்களற்ற நாடு" தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் "கிராமங்களை உருவாக்குவோம்" கிராமிய போதைப்பொருள் ஒழிப்பு செயற்றிட்டத்தின் கீழ் இலங்கையின் சகல கிராமங்களிலும் சமூக பொலிஸ்குழுக்களை அடிப்படையாகக் கொண்ட போதைப்பொருள் தேடல்கள், புனர்வாழ்வு அளித்தல் மற்றும் போதைப் பொருள்ஒழிப்பு செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராமங்களில் சட்ட விரோத போதைப்பொருள் விற்பனை மற்றும் உற்பத்தியை இல்லாதொழிப்பதற்கான நிலையான முறையொன்றினை தயாரித்தல், கிராமத்தவர்களின் ஒத்துழைப்புடன் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எச்சரிக்கை விடுத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு வேறு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தலும் மேற்பார்வை செய்தலும், கிராமங்களிலுள்ள போதைப் பொருட்களுக்கு அடிமையான வர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான வழிகாட்டல்களையும் உதவிகளையும் வழங்குதல், கிராமிய மட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல், கிராமத்தின் இளம் சமுதாயத்தினரையும் பாடசாலை மாணவர்களையும் இலக்காக கொண்டு போதைப்பொருள் பாவனையினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பாக தெளிவுபடுத்தல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் இச்செயற்றிட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, சிறந்த சமூகத்தையும் அபிவிருத்தியடைந்த நாட்டினையும் ஆரோக்கியமான மக்களையும் கட்டியெழுப்புவதில் காணப்படும் சவாலான போதைப்பொருட்களை, இல்லாதொழிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் கடந்த மூன்று வருட காலத்திற்குள் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களினால் தேசிய மட்டத்தில் சிறந்த பெறுபேறுகள் கிடைத்து வருகின்றன.

விசேடமாக புகையிலை பாவனை கடந்த சில வருடங்களில் குறிப்பிடத்தக்க மட்டத்திற்கு குறைவடைந்துள்ளமை இந் நாட்டு மக்களின் சுகாதாரத் துறையில் பெற்றுக் கொண்ட மிகப்பெரும் வெற்றியாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டை நேசிக்கும் சகல மக்களும் ஒன்றிணைந்து செயற்படுவதனூடாக இந்த செயற்றிட்டத்தை வெற்றிகரமாக முன்னோக்கி கொண்டு செல்லலாம் என ஜனாதிபதி இதன்போது நம்பிக்கை தெரிவித்தார்.

அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, ஜோன் செனவிரட்ன, தலதா அத்துகோரள, மகிந்த அமரவீர ஆகியோரும் பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதான உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பாதுகாப்பு பிரிவின் பிரதானிகள் உள்ளிட்ட குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர் (இ-7)

## மாணவியை தாக்கிய ஆசிரியர் கைதானார்

(கொழும்பு)

நுகவெல பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் விளையாட்டு பாட ஆசிரியர் ஒருவரை நேற்று கைது செய்துள்ளதாக, புஸ்ஸல்லாவை பொலிஸார் தெரிவித்தனர்.

கூடைப்பந்து விளையாட்டுப் பயிற்சியில், பங்குபற்றவில்லை என பாடசாலை மாணவி ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டின் பேரிலேயே, இவர் கைது செய்யப்பட்டுள்ளார். தாக்குதலில் பாதிக்கப்பட்ட மாணவி கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ-7)

## இசை ஆராதனை நாளை

(யாழ்ப்பாணம்)

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 171ஆவது இசையாராதனை நாளை 25 ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வட இலங்கை சங்கீத சபை தற்பரானந்தன் அரங்கில் சிறப்பாக நடைபெறும்.

யாழ். இந்தியத் துணைத் தூதுவராலயத்தின் அனுசரணையோடு வட இலங்கைச் சங்கீத சபை வழங்கும் இந்த ஆராதனை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் வட இலங்கைச் சங்கீத சபையின்தலைவருமாகிய ந.தெய்வேந்திர ராஜா தலைமையில்நடைபெறும்

இதில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நடராஜன், சிறப்பு விருந்தினராக வலிகாம் தெற்கு பிரதேச செயலர் திருமதி மதுமதி வசந்தகுமார், கௌரவ விருந்தினராக தொழிலதிபர் நடேசு பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சற்குரு தியாகராஜ உற்சவத்தைச் சிறப்பிக்க ஈழத்துக் கலைஞர்கள் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளைப் பாடியும் வாசித்தும் பரவசப்படுத்துவார்கள்.

இதில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (இ

## மீண்டும் அமைச்சு பதவி வழங்க ரவி கோரிக்கை



(கொழும்பு)

மீண்டும் தமக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சர் பதவிகளில் இருந்து விலகுமாறு ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலரை க்ட்சியின் தலைமை கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதால், ஐக்கிய தேசியக்கட்சிக்குள் பெரும்நெருக்கடியானநிலைமை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை பிணை முறி விவகாரத்தில் தன் மீது குற்றம் சுமத்தப்படவில்லை எனவும் தனிப்பட்ட கொடுக் கல், வாங்கல் தொடர்பாகவே தன் மீது குற்றச்சாட்டு சுமத் தப்பட்டுள்ளதால், அமைச் சரவை மாற்றத்தின் போது மீண்டும் தனக்கு அமைச்சு பதவி வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளதாக அறிய முடிகிறது. (இ-7)

## வீதியில் வைத்து சங்கிலி அறுப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளிலில் சென்று கொண்டிருந்த யுவதியின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் உரும்பிராய் சந்தியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த யுவதியைப் பின் தொடர்ந்த திருடர்கள் யுவதியின் கழுத்திலிருந்து தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

## இராசி பலன்

24.02.2018

மாசி 12, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு

நவமி முன்னிரவு 8.03 மணிவரை

ரோகினி முற்பகல் 9.09 மணிவரை

சுபநேரம் 3.30-5.00 மணிவரை

இராகுகாலம் 9.30-11.00 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| சூரி, புத, சுக் | கிரகநிலை | | ராகு |
| கேது | | | |
| சனி | குரு, செவ் | | |

சந்திராஷ்டமம் கேட்டை இரவு 7.45 மணிக்கு மிதுன-சந்

**மேடம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகழும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், யோகமான நாள்.

**இடபம்:** பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் மாற்றம் செய்ய முற்படுவீர்கள்.

**மிதுனம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்ள வேண்டிய நாள், சுப விரயங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் கைகூடும், தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி:** தொழிலில் இருந்த எதிர்பார்ப்புகள் மாறும், பாக்கிகள் வசூலாகலாம், திடீர் பயணங்கள் ஏற்படலாம், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

**துலாம்:** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் கவலைகள் தோன்றி மறையும், வேலைச் சுமை கூடும் நாள், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு:** கடன் பிரச்சினைகளைத் தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பீர்கள், உடல் நலன் சீராகும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**மகரம்:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், . பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வாகனத்தை பழுது பார்க்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மீனம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

# சர்வதேச ஆய்வு மாநாடும் கண்காட்சியும் நேற்று ஆரம்பம்












(படங்கள்:-பொ.சோபிகா)



(யாழ்ப்பாணம்)


யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவ அலகும், வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மற்றும் இந்திய ஆயுஸ் அமைச்சும் இணைந்து நடத்தும் முதலாவது சர்வதேச ஆய்வு மாநாடும் கண்காட்சியும் நேற்று வெள்ளிக்கிழமை கைதடியில் அமைந்துள்ள சித்தமருத்துவ அலகில் ஆரம்பமாகியது.

'வருமுன் காக்க... நோயின்றி வாழ... இயற்கையுடன் ஒன்றிணைய... என்ற தொனிப்பொருளில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வினை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜி.குணசீலன் ஆரம்பித்து வைத்தார். சர்வதேச ஆய்வு மாநாட்டுக்கான பயிற்சிப்பட்டறை நேற்று ஆரம்பமாகியது. இதில் கலந்து கொள்வதற்காக இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து பல ஆய்வாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். 175 ஆய்வுக்கட்டுரைகள் இந்த ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. மேலும் சித்த மருத்துவ கண்காட்சி பல்வேறு வகைகளில் அமைக்கப்பட்டுள்ளது. வட கிழக்கு பாரம்பரிய வைத்திய முறைகள், பாடசாலை மாணவர்களின் பாடத்திற்கு அமைவான விடயங்கள் உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கே.சர்வேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியார் ஆர்.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளார் எஸ்.திருவாகரன், இந்திய ஆயுஸ் அமைச்சின் சித்த மருத்துவ ஆய்வுசபை ஆய்வாளர் ஜி.செந்தில்வேல் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். இந்த கண்காட்சி எதிர்வரும் 27 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. (இ-9)









கவிஞர் சோ.பத்மநாதனின் மொழி பெயர்ப்பில் 'தென்னாசியக் கவிதைகள்' எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த 7' ஆம்திகதி புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை றோ.க.த .க. பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் செ.அன்ரன் செல்வநாயகம் தலைமையில் இடம்பெறும். (இ-10)



## கவிதைத் தொகுதி வெளியீட்டுவிழா



(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் எஸ். பெருமாளின் 'யாருக்குச் சொந்தம், இந்தக்குழந்தை யாருக்குச்சொந்தம்?' கவிதைத் தொகுதி நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் யாழ். நூலக கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. (இ-7)

## அபிவிருத்தியில் தனியார் பங்களிப்பு குறித்து இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். முகாமையாளர் சம்மேளனம்(JMF) "வட மாகாணத்தின் அபிவிருத்தியில் தனியார் துறையின் பங்களிப்பும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்" பற்றிய கலந்துரையாடலை இன்று சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் ஒழுங்கு செய்துள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-10)











தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் 2017 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் முதல் இடங்களைப் பெற்ற வடக்கு மாகாண மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்: மகாலிங்கம்)





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 20 ஆம் திகதி கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே கலந்து கொண்டார்.

(படங்கள்:- குருநகர் செய்தியாளர்)

# எழுத்தாளர் தேவகாந்தனின் உரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்த உரை நிகழ்ச்சி நாளை 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நூலகக் குவிமாடக் கேட்போர் கூடத்தில் நடைபெறும். கனடாவிலிருந்து வந்திருக்கும் எழுத்தாளர் தேவகாந்தன், சமகால தமிழ் நாவல் பரப்பில் புலம் பெயர்ந்தோர் நாவல்களின் வகிபாகம் என்னும் தலைப்பில் உரையாற்றுவார். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும். ஆர்வமுள்ளோர் யாரும் பங்குபற்றலாமென வாசகர் வட்டத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7)


மு.திருநாவுக்கரசு

பூகோளவாதம்

புதிய தேசியவாதம்

நூல் வெளியீடு

வீரசிங்கம் மண்டபம்

சனிக்கிழமை - 24.02.2018

பிற்பகல் 3.00 மணி

தலைமை:
நிலாந்தன்

பிரதம விருந்தினர்:
சி.வி.விக்னேஸ்வரன்
கௌரவ முதலமைச்சர்-வடமாகாணம்

சிறப்பு விருந்தினர்
பா.செயப்பிரகாசம்

கௌரவப் பிரதி
வழங்குபவர்: FR.J.E. ஜெயசீலன்
வளன் ஆச்சிரமம்

பெறுநர்:
குழந்தை.மா.சண்முகலிங்கம்

(2890)

தமிழாய்வு மையம்: இலங்கை-பிரித்தானியா


# இந்தியாவின் உதவியுடன் அம்பாந்தோட்டையில் மக்களுக்கு பொருளுதவி

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்திய அரசாங்கத்தால் 300 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட உள்ளன.

அமைச்சர் மகிந்த அமரவீர இந்திய அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இவை வழங்கப்பட உள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

துவிச்சக்கரவண்டிகள், தையல் இயந்திரங்கள் மற்றும் மண்வெட்டிகள் உள்ளிட்ட விவசாய உபகரணங்கள் இதில் உள்ளடங்குவதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)


உ
சிவமயம்



அமெரிக்க ஹாவாய் ஆதீன முதல்வர்

"சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின் தரிசனம்"

இடம்:
ஸ்ரீசுப்பிரமுனிய கோட்டம்,
பழைய வீதி,
கோப்பாய்.

காலம்:
25.02.2018
ஞாயிற்றுக்கிழமை
மாலை
4.00 மணி

அன்புடையீர் வணக்கம்,

அமெரிக்காவிலுள்ள ஹாவாய் சைவ ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் உலகின் பல பாகங்களையும் சேர்ந்த 65 அடியவர்கள் சகிதம் ஆன்மீக யாத்திரையாக எம் மண்ணுக்கு வருகை தந்துள்ளார். அவர்களை அடியவர்கள் தரிசித்து ஆசி பெறுவதற்கு எமது ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் ஏற்பாடு செய்துள்ளது. இவ்வரிய தெய்வீக நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டு சுவாமிகளின் நல்லாசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்,
பழைய வீதி,
கோப்பாய்.

இங்ஙனம்
ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டச்
சைவச் சிறுவர்கள்.

(2682)



கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 9 சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:HNDA/தனியார் தொழில்
தொ.இ: B/7510

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7512

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: O/L/ அரசதொழில்
தொ.இ: B/7515

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: சூரி செவ் 10 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7524

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 10 சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc/பொறியியலாளர்
தொ.இ: G/7585

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 18
தகைமை/தொழில்: BA/அரசதொழில்
தொ.இ: G/7586

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா:32 செவ் 4 இல்
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7600

பிறப்பு: 1978 RC
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/6605

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொட
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்

# நீதிமன்றின் உத்தரவிற்கு அமைய மன்னாரில் வெதுப்பகம் ஒன்றிற்கு சீல்

(பனிக்கள்குளம்)

மன்னாரில் உள்ள பிரபல வெதுப்பகம் ஒன்று மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைவாக சீல் வைத்து மூடப்பட்டது.

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான பொது சுகாதார பரிசேதகர்கள் அடங்கிய குழுவினர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் திடீரென சென்று பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மன்னாரில் உள்ள பிரபல வெதுப்பகம் ஒன்றிற்குச் சென்ற குறித்த குழுவினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த வெதுப்பகத்தில் உடல் நலத்திற்கு ஒவ்வாத வகையில் பொருட்களை களஞ்சியப் படுத்தியமை, அங்கு கடமையாற்றுபவர்கள் சிலர் சுகாதாரத்தை கடைப்பிடிக்காமை, காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்ட நிலையில், குறித்த வெதுப்பகத்தின் உரிமையாளருக்கு எதிராக நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் பொது சுகாதார வைத்திய அதிகாரியினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது அன்றைய தினமே விசரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா குறித்த வெதுப்பகத்தின் உரிமையாளர் குற்றத்தை ஒப்புக் கொண்டமைக்கு அமைவாக 25 ஆயிரம் ரூபாய் அபராதத்தை செலுத்துமாறு உத்தரவிட்டார்.

மேலும் நீதிமன்றத்தின் மறு அறிவித்தல் வரை குறித்த வெதுப்பகத்தை சீல் வைத்து மூடுமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைவாக குறித்த வெதுப்பகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.(2)

# சாரணர்களுக்கான பாசறையும் சான்றிதழ்கள் வழங்கி வைப்பும்



(பரந்தன்)

கிளிநொச்சி மற்றும் தென்மராட்சி கல்வி வலயங்களுக்கான இவ்வாண்டு சாரணர்களுக்கான ஒன்றுகூடல் கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவட்ட சாரண ஆணையாளரும், கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் அதிபருமான கி. விக்கினராஜா தலைமையில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகி நேற்று முன்னதினம் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வுடன் நிறைவு பெற்றது.

இச்சாரணர்களின் ஒன்றுகூடல் நிகழ்விற்கு கிளிநொச்சி கல்வி வலயத்திலிருந்து பத்துப் பாடசாலைகளும், தென்மராட்சி கல்வி வலயத்திலிருந்து ஆறு பாடசாலைகளிலிருந்தும் மொத்தம் 364 சாரண மாணவர்களில் 307 ஆண் சாரண மாணவர்களும், 57 பெண் சாரண மாணவர்களும் கலந்து கொண்டனர். இதில் அதிகளவான ஆண் (53) மற்றும் பெண்(29) சாரண மாணவர்கள் கிளிநொச்சி இந்துக்கல்லூரியிருந்து பங்கு பற்றியிருந் தனர். அத்துடன் 25 சாரண ஆசிரியர்களும் 10 வள வாளர்களும் பங்குபற்றி யிருந்தனர்.

ஒன்றுகூடலில் சாரண மாணவர்களுக்கான கூடார ஒழுங்கமைப்பு மற்றும் விசேட பயிற்சிகள், அணி நடை வகுப்பு, விளையாட்டுகள், தீப் பாசறை நிகழ்வு என்பன இடம்பெற்று இருந்ததுடன் நிகழ்வின் இறுதி நாளான சாரண அமைப்பின் தந்தை பேடன் பவலின் தினமான நேற்று முன் தினம் கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பிற்பகல் 2 மணியளவில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடை பெற்றது. (2-312)



# பனிக்க நீராவியில் மதுபான நிலையம் அமைவதை எதிர்த்து பெண்கள் அமைப்பு கையெழுத்து வேட்டை

(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிலுள்ள பனிக்க நீராவிப்பகுதியில் ஏ-9 வீதியில் தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றில் மதுபான விற்பனை நிலையம் அமைப்பதற்கு அப்பகுதியில் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இதற்கு மகளிர் கிராம அபிவிருத்தி சங்கம் கடும் எதிர்ப்பினை தெரிவித்துள்ளதுடன் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் அப்பகுதியிலுள்ள கிராம மக்களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கையினை மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இது குறித்து பனிக்கநீராவிப்பகுதியிலுள்ள கிராம மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்.

கடந்த வருடம் முதல் பனிக்கநீராவிப்பகுதியிலுள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணி ஒன்றில் மதுபான விற்பனை நிலையம் அமையவுள்ளதாக எமக்குத் தெரியவந்துள்ளது.

இதையடுத்து எமது பகுதியில் குறித்த மதுபான நிலையத்தினை அமைப்பதற்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்ததுடன் எமது எதிர்ப்பினை கடிதமாகத் தயாரித்து வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபை, ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பாராளுமனற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோருக்கு முகவரி இடப்பட்டு கடிதங்கள் எமது பகுதியிலுள்ள பொதுமக்களின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டது.

அக்கடிதத்திற்கு இன்று வரையில் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் அதிகாரிகளால் மேற்கொள்ளவில்லை.

எமது பகுதியில் மதுபான விற்பனை நிலையத்தினை அமைப்பதில் சிலர் மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றார்கள்.

கிராமத்தில் அக்கறையுள்ளவர்கள் ஒன்றிணைந்து பனிக்கநீராவிப்பகுதியில் மதுபான விற்பனை நிலையம் அமைப்பதற்கு பெரு முயற்சிகள் மேற்கொண்டு வருவது கவலையளிக்கின்றது. பன்றிக்கெய்தகுளம் பகுதிக்கு அருகிலுள்ள பனிக்கநீராவிப்பகுதியில் 75 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கூலிவேலைகளை மேற்கொண்டு வருபவர்களே அதிகம் வசித்து வருகின்றார்கள். பாடசாலை மாணவர்கள் கல்வி கற்றுவரும் இப்பகுதியில் மதுபான நிலையம் அமைப்பதை. நாங்கள் கடுமையாகவே எதிர்க்கின்றோம்.

தற்போது எமது பகுதியிலுள்ள கள்ளுத்தவறணை ஒன்றினை அகற்றுவதற்கு நாங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். குறித்த கள்ளுத் தவறணையை அகற்றுவதற்கு பல போராட்டங்களை மேற்கொண்டிருந்தோம். எனினும் அங்கு கள்ளு விற்பனை குறைவடையும்போது பக்கெற்றில் சட்டவிரோத கசிப்புக்கள் இப்பகுதிக்கு எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.

இப்பகு தியில் மதுபான விற்பனை நிலையம் அமையும்பட்சத் தில் ஆண்களுடன் சமனாக பெண்களும் மதுபோதைக்கு அடிமையாக வேண்டிய நிலை உருவாகும்.

நாங்கள் எவரும் இப்பகுதியில் மதுபான விற்பனை நிலையம் அமைப்பதற்கு ஆதரவு வழங்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் இந்நடவடிக்கையினை தடுத்து நிறுத்துவதற்கு எமது கிராமத்திலுள்ளவர்களின் கையெழுத்து பெறப்பட்டு அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து மதுபான நிலையம் அமைக்கும் நடவடிக்கையை தடுத்து நிறுத்துவதற்கு முயன்று வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர். (2-250)

# கிளிநொச்சி, முல்லைத்தீவில் இரு தினங்கள் நடமாடும் சேவை

(பூநகரி)

சமூக சேவைகள் தொடர்பான மாபெரும் நடமாடும் சேவை இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண மகளிர் விவகாரம் புனர்வாழ்வு சமூக சேவைகள் கூட்டுறவு வர்த்தக வாணிப அமைச்சு அறிவித்துள்ளது. இதற்கமைய இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமை கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி வளாகத்திலும், மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வளாகத்திலும் நடைபெறும்.

இந்த நடமாடும் சேவையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சுயதொழில், வீட்டுத் திருத்தம், மலசலகூட வசதி என்பன பற்றியும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான சுயதொழில் உதவி, முதியோருக்கான ஆள் அடையாள அட்டை வழங்கல், நலிவுற்ற குடும்பங்களுக்கான சுயதொழில் உதவி வழங்கல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அனைத்துத் திணைக்களங்களின் அலுவலர்களும் கலந்து கொண்டு கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2-84)

# வியாபாரம் செய்வதற்கு குடும்பஸ்தருக்கு உதவி



(பனிக்கன் குளம்)

வவுனியா மகாறம்பைக் குளம் பகுதியில் வசித்து வரும் குடும்பஸ்தர் ஒருவருக்கு வியாபாரம் செய்வதற்கு உதவிகள் வழங்கிவைக்குமாறு தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமாரிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து புலம் பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வாழும் உறவுகளின் உதவியுடன் நேற்றுக் காலை வவுனியா பிரதேச செயலகத்திலுள்ள ஆலயத்தின் முன்றலில் வைத்து மரக்கறி வியாபாரம் மேற்கொள்வதற்கு துவிச்சக்கரவண்டி, தராசு, மரக்கறியுடன் கூடை என்பன பிரஸ்தாப நபருக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அப்பகுதிகளிலுள்ள வீடுகளுக்குச் சென்று மரக்கறி வியாபார நடவடிக்கையை மேற்கொள்வதற்கு குறித்த உத்விகள் வழங்கி வைக்கப் பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் கா.உதயராஜா மரக்கறிகள் வாங்கி வியாபார நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தார். மேலும் இந்நிகழ் வில் சமூக ஆர்வலர் விக்னா கலந்துகொண்டிருந்தார் (2-28)

# யானைகளின் தாக்கத்தால் பயன்தரும் மரங்கள் அழிப்பு

## விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கல்மடுநகர் பகுதியில் காட்டு யானைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகளும் பிரதேச மக்களும் சம்பந்தப் பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கல்மடுநகர், றங்கன் குடியிருப்பு, நாவல் நகர் ஆகிய பகுதிகளில் தற போது காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப் படுவதாகவும் இதனால் அச்சத் துடன் பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கல்மடுநகர், நாவல் நகர், றங்கன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் தினமும் இரவு வேளைக்ளில் காட்டு யானைகள் உள்நுழைந்து பெருமளவான தென்னை மற்றும் பலா போன்ற பயன்தரு மரங்களை அழித்து வருகின்றன. அத்துடன் விவசாயச் செய்கைகளையும் இவ்வாறு யானைகள் அழித்து வருகின்றன என்றும் இது தொடர்பில் பல தடவைகள் பிரதேச செயலகம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றுக்கு அறிவித்துள்ள போதும், எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை எனச்சுட்டிக் காட்டியுள்ள இப்பகுதி விவசாயிகள் அழிவுகள் தொடர்பில் பதிவுகளை மேற்கொள்கின்ற போதும் அதற்கான கொடுப்பனவுகள் எவையும் கிடைப்பதில்லை எனவும் தெரிவித்துள் ளனர்.

இவ்வாறு காட்டு யானைத் தாக்கத்திலிருந்து தமது கிராமங்களையும் பொதுமக்களையும் பாதுகாக்க யானை வேலிகளை அமைத்து தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (2-315)

# ஆயிரத்து 210 வழக்குகள் பதிவு;

# 68 இலட்சத்து 31 ஆயிரத்து 100 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டது

## வவுனியா மது ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவிப்பு

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவினரால் கடந்த 2017 ஆம் ஆண்டு போதைப் பொருள் தொடர்பாக மொத்தமாக ஆயிரத்து 210 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 68 இலட்சத்து 31 ஆயிரத்து 100 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளதாக வவுனியா மது ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.ஐ. சுபசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

கடந்த வருடம் கஞ்சா 130 கிலோகிராம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கஞ்சா போதைப்பொருள் தொடர்பாக 507 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அது தொடர்பாக குற்றப்பணமாக 37 இலட்சத்து 58 ஆயிரத்து ஐந்நூறு ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது.

ஹெரோயின் 2 கிலோ 277 கிராம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக 40 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ஒரு இலட்சத்து 59 ஆயிரத்து 500 ரூபா குற்றப் பணமாக அறவிடப்பட்டுள்ளது.

கசிப்பு 15 லீற்றர் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக 16 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா குற்றப்பணமாக அறவிடப்பட்டுள்ளதுடன் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளில் சில தொடர்ந்து விசாரணைகுட்படுத்தப்படுவதாகவும் மேலும் தெரிவித்தார்.(2-250)

# வைத்தியசாலைகளில் சேவையாற்ற போதுமான வைத்தியர்கள் இல்லாமை கவலைக்குரிய விடயம்

## வடக்கு மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டு



(வவுனியா)

மருத்துவ பீடங்களில் இருந்து வருடாவருடம் பலநூற்றுக்கணக்கான மருத்துவர்களை உருவாக்கி வருகின்ற போதும் வைத்தியசாலைகளில் சேவையாற்றுவதற்கு போதுமான வைத்தியர்கள் இல்லாமை கவலைக்குரிய விடயமாகும் என தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், நோய்களற்ற ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்பவேண்டுமாயின் பொது மக்களும் மருத்துவ பிரிவும் இணைந்து செயற்படுகின்ற போதே அது சாத்தியமாகும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியா புளியங்குளம் பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு கட்டட திறப்பு விழா நேற்று முன்தினம் வவுனியாவில் இடம் பெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடபகுதியில் பல்வேறு அரச மற்றும் தனியார் வைத்திய சாலைகள் வைத்திய சேவைகளை பொது மக்களுக்கு வழங்கி வருகின்ற போதும் அவற்றின் சேவைகள் பூரணத்துவம் உடையன என்று கூற முடியாதுள்ளது.

இந் நிலையில் பல்வேறு பகுதிகளிலுள்ள வைத்திய சாலைகளின் அபிவிருத்தி அத்தியாவசியமானதும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகவும் அமைந்துள்ளன.

வெறுமனே கட்டடங்களை மட்டும் உருவாக்குவதன் மூலம் வைத்தியசாலைகள் சிறப்பான சேவைகளை வழங்கிவிட முடியாது. மாறாக இவ் வைத்தியசாலைகளில் சேவையாற்றுவதற்கு கூடுதலான வைத்தியர்கள்,தாதியர் போன்றோர் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும்.

வருடாவருடம் பல நூற்றுக்கணக்கான வைத்தியர்களை பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்கள் உருவாக்கி வருகின்ற போதும் இவ்வாறான வைத்தியசாலைகளில் சேவையாற்றுவதற்கு போதுமான வைத்தியர்கள் இல்லாமை கவலைக்குரிய விடயமாகும்.

பல்கலைக்கழகங்களிலிருந்து வருடா வருடம் வெளியேறுகின்ற வைத்தியர்களில் கூடுதலானவர்கள் மேலதிகப் படிப்பு அல்லது வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக வெளிநாடுகளை நோக்கி சென்று விடுகின்றார்கள். திரும்பி வருபவர்கள் மிகச் சிலரே. இதனால் பின்தங்கிய பகுதிகளிலுள்ள பல்வேறுவைத்தியசாலைகளில் ஒரு நிரந்தர வைத்தியர் கூட இல்லாத நிலையில் வருகைதரும் வைத்திய நிபுணர்களின் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளுடன் அவை இயங்கி வருவது மனதிற்கு வேதனையளிக்கின்றது.

இதே நேரத்தில் எத்தனையோ வைத்திய நிபுணர்கள் அவர்களின் திறமை அடிப்படையில் மேலை நாடுகளுக்கு சேவை புரிவதற்காக அழைக்கப்பட்ட போதும் அவர்கள் அந்த அழைப்புக்களை நிராகரித்து தமது மண்ணில் இங்குள்ள உறவுகளுக்கு மருத்துவ சேவைகளை இரவு பகல் கண் துஞ்சாது ஆற்றி வருகின்றார்கள். அவர்களின் அளப்பெரும் சேவைகளை இத்தருணத்தில் நன்றியறிதலுடன் பாராட்டுகின்றேன்.

அதேபோன்று வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற வருகின்ற அல்லது வைத்திய சாலைகளில் தங்கியிருந்து மருத்துவ வசதிகளைப் பெற்று வருகின்ற நோயாளர்கள் இந்த வைத்தியசாலைகளின் சேவைகள் தங்களுடன் முற்றுப் பெறுவதில்லை என்பதை மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

இனிவரும்நோயாளர்களுக்கும் மருத்துவ சேவைகளை முறையாக வழங்கக் கூடிய வகையில் சுத்தம், சுகாதாரம் ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்த முன் வர வேண்டும்.

எனவே எமது பகுதியில் நோய்களற்ற ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்பவேண்டுமாயின் பொதுமக்களும் மருத்துவ பிரிவும் இணைந்து செயற்படுகின்ற போதே அது சாத்தியமாகும் என மேலும் தெரிவித்தார். (2-9)




# நீர் இறைக்கும் இயந்திரத்தை

## சூரிய சக்தியில் இயக்குவதற்கு நிதியை பெற்றுத்தருமாறு கடிதம்

(கண்டாவளை)

புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்திற்கான நீர் இறைக்கும் இயந்திரத்தை சூரிய சக்தி மூலம் இயக்கி அதன் மூலம் விவசாயிகள் நன்மையடைக்கூடிய வகையில் திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கான நிதியொதுக்கீட்டைச் செய்து தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தேசிய நல்லிணக்க அமைச்சுக்கு அண்மையில் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

கிளிநொச்சி புழுதியாறு ஏற்றுநீர்ப்பாசனத்திட்டத்தை அதன் பயனாளிகள் சரியாக பயன்படுத்தும் போது அதிக நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும் என நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 150 ஏக்கர் நிலப்பரப்பிற்கான நீர்விநியோக கட்டமைப்புக்களும் அமைக்கப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டது.

விவசாய செய்கைகளை மேம்படுத்தும் நோக்கில் விதை தானியங்கள், விவசாய உள்ளீடுகள் என்பனவும் வழங்கப்பட்ட போதும், குறிப்பிட்ட சில விவசாயிகளைத்தவிர ஏனைய விவசாயிகள் எந்த விதமான பயிர்ச்செய்கைகளையும் முன்னெடுப்பதில்லை இதனால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

அதாவது, தற்போது ஏற்று நீர்ப்பாசனத் திற்கான நீர் இறைக்கும் இயந்திரம் எரிபொருள் மூலம் இயங்கும் இயந்திரமே பொருத்தப்பட்டுள்ளது. இதனை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தும் போது அதற்கான எரிபொருள் செலவு குறைவாக இருக்கும். மாறாக ஒரு சில விவசாயிகள் பயன்படுத்தும் போது எரிபொருள் செலவு அதிக அளவில் இருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களத் திடம் தொடர்புகொண்டு வினவிய போது, பெருந்தொகை நிதியினை செலவிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள இக்கட்டுமானப் பணிகளை விவசாயிகள் உரியமுறையில் பயன்படுத்துவதில்லை. குறிப்பிட்ட சில விவசாயிகளே அதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஒட்டுமொத்தமாக எல்லா விவசாயிகளும் இதனை பயன் படுத்திக் கொண்டும் அதன் மூலம் உரிய பயன்களைப்பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# சீனிப்பாணியை தேன் என ஏமாற்றி வியாபாரம் செய்த இருவர் விளக்கமறியலில்

(குருமன்காடு)

வவுனியா நெளுக்குளம் ஊர்மிலாகோட்டம் பகுதியில் சீனிப்பாணியை காய்ச்சி பல இடங்களுக்குச் சென்று தேன் என்று தெரிவித்து பொதுமக்களை ஏமாற்றி வியாபாரம் மேற்கொண்ட இருவர் நேற்று முன்தினம் ஓமந்தை பனிக்க நீராவி பகுதியில் சுகாதாரப் பரிசோதகர்களினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் சுகாதாரப் பரிசோதகர் தெரிவிக்கையில்,

பனிக்கநீராவிப்பகுதியில் இருவர் 27போத்தல்களுடன் தேன் வியாபாரம் மேற்கொண்டபோது சந்தேகத்தில்தேனை பரிசோதனை மேற்கொண்ட போது அது சீனிப்பாணி என்பது தெரியவந்துள்ளது.

இதையடுத்து அவர்களை விசாரணைக்குட்படுத்திய போது நெளுக்குளம், ஊர் மிலாகோட்டம் பகுதியிலிருந்து எடுத்து வந்து பல இடங்களில் இவ்வாறு விற்பனை செய்து வருவதாக இருவரும் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அவர்களிடம் கைப்பற்றப்பட்ட 27போத்தல் தேன்களுடன் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற சட்ட நடவடிக்கை மேற்கொண்ட போது அவர்கள் இருவரையும் 14நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர் கே. சிவரஞ்சன் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# கட்டட இடமாற்றமும் புதிய கட்டடத் திறப்பு விழாவும்

(பூநகரி)

இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் (சீ.எம்.யூ) இது வரை காலமும் இரணைமடு கிளிநொச்சி எனும் இடத்தில் இயங்கி வந்தது.

எமது அங்கத்தவர் பொது மக்கள் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க இல. 64/1, கணேசபுரம் கிளிநொச்சி எனும் இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான புதிய அலுவலகத் திறப்பு விழா நாளை 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு இல, 64/1, கணேசபுரம் கிளிநொச்சியில் (அலுவலக மண்டபம்) திறந்து வைக்கப்படும் என மாவட்ட இணைப்பாளர் திருமதி நாகரெட்ணம் யோகராணி அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல் தேவைப்படுவோர், 077 9482937, 077 728 0641, 077 839 5891, 075 7772734 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தத் திறப்பு விழாவின் போது இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் சில்வெஸ்ரர் ஜயக்கொடி, பிரதிப் பொதுச்செயலாளர் எஸ்.ரி. நாதன் உட்பட சங்கத்தின் நிறைவேற்று சபை உறுப்பினர்கள் பலரும் கொழும்பு தலைமைச் செயலகத்திலிருந்து வருகை தருவதுடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தொழிலாளர்கள், சமூக ஆர்வலர்கள், மதத் தலைவர்கள் போன்றவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (2-84)

# விவசாயிகளுக்கு உலருணவு நிவாரணம்

(பனிக்கன்குளம்)

நாட்டில் நிலவுகின்ற வரட்சியினால் விவசாய செய்கை பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு, உலருணவு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் 60 மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இதன்படி ஒரு மாத காலத்திற்கான உலருணவு நிவாரணம் வழங்குவதற்கான பணிகள் தற்பொழுது முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இன்னும் ஒரு மாத காலப் பகுதியில் இதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப் படும். இதன் மூலம் வரட்சியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் சுமார் 14 ஆயிரத்து 500 குடும்பங்கள் வரை பயனடைவார்கள் என்றும் அறியமுடிகிறது. (2-281)

# மருந்தகங்கள், வர்த்தக நிலையங்கள் மீது மன்னார் நகரில் சோதனை நடவடிக்கை

## மருந்தகம் ஒன்றிற்கு சீல் வைப்பு

(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரிகளால் மன்னார் நகர் பகுதியில் உள்ள மருந்தகங்கள் மற்றும் ஏனைய வர்த்தக நிலையங்கள் மீது கடந்த வாரம் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது மன்னார் நகரில் உள்ள பிரபல மருந்தகம் ஒன்றில் காலாவதியான மருந்துகள் விற்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டு மருந்தகம் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.


இதேவேளை 8 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் கடந்த 20 ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதன் போது பிரபல மருந்தகம் ஒன்றில் காலாவதியான மருந்துகள் விற்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் குறித்த மருந்தகத்தின் உரிமையாளருக்கு எதிராகவும் வழக்குதாக்கல்செய்யப்பட்டது.

குறித்த மருந்தகத்தின் உரிமையாளருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் 20 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும் குறித்த மருந்தகத்தை சீல் வைத்து மூடுமாறுமன்று உத்தரவிட்டதோடு, இதற்கான வழக்கு விசாரணை எதிர்வரும் 06.03.2018 வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## ரூ.50 மில்லியன் கோரிய
# விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, கொழும்பு வணிக மேல்நீதிமன்ற நீதிபதி மஹிந்த சமயவர்தன முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே ஒத்திவைக்கப்பட்டது.

புலமைச் சொத்து சட்டத்தை மீறிய குற்றச் சாட்டுக்கு இழப்பீடு வழங்குமாறு தெரிவித்து, விமல் வீரவன்சவுக்கு எதிராக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவினால், இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

விமல் வீரவன்சவினால், எழுதி வெளியிடப்பட்ட "நெத்த வெனுவெட எத்த" எனும் புத்தகம் தன்னுடைய கருத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. அவர், ஜே.வி.பியின் உறுப்பினராக இருந்த வேளையில், ஜே.வி.பியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டங்களில் தன்னால் முன்வைக்கப்பட்ட கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை அடிப்படையாக வைத்தே இந்தப் புத்தகம் எழுதப்பட்டதாக அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

ஆகையால், புலமைச் சொத்து சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் அவரிடமிருந்து 50 மில்லியன் ரூபாவை பெற்றுத்தருமாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# உரமானியம் தொடர்பாக புதிய கொள்கை தயாரிப்பு



(கொழும்பு)

உர மானியம் தொடர்பாக புதியதொரு கொள்கையை அறிமுகப்படுத்துவதன் ஊடாக தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேர்தலின் பின்னர் முதல் தடவையாக தேசிய பொருளாதார சபை ஜனாதிபதி செயலகத்தில் ஒன்றுகூடிய சந்தர்ப்பத்திலேயே இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உர மானியம் வழங்குதல் தொடர்பாக ஏற்பட்டுள்ள இரண்டு பிரதான பிரச்சினைகள் தொடர்பாக இதன் போது கவனம் செலுத்தப்பட்டதுடன், தற்போது பணமாக வழங்கப்படும் உர மானிய முறையில் திருத்தம் செய்யவும் எதிர்காலத்தில் உரத் தட்டுப்பாடு ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கவும் இதன் போது முன்மொழியப்பட்டது.

விவசாயிகளின் உரத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், விவசாய நிலங்கள் மாசடையாது பாதுகாக்கவும் பொருத்தமானதொரு செயற்றிட்டத்தை தயாரிக்குமாறு தேசிய பொருளாதார சபைக்கும் விவசாய அமைச்சிற்கும் இதன்போது ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

மேலும் உரத் தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு அரசாங்கம் உரம் பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்களின் பெயர் விபரங்களை இற்றைப்படுத்தி பேண வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கான சிறந்த முறையொன்றினை அறிமுகப்படுத்தவும் ஆலோசனை வழங்கப்பட்டது.

கிளைபோசேட் தடை தொடர்பாக இதன்போது பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டதுடன், கிளைபோசேட் தொடர்பாக தற்போது உள்ள சட்ட திட்டங்களில் திருத்தங்களை கொண்டுவந்து புதிய கொள்கை ஒன்றினை அறிமுகப்படுத்துவதன் ஊடாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என தேசிய பொருளாதார சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப தேயிலை மற்றும் இறப்பர் பயிர் செய்யப்படும் நிலங்களில் கிளைபோசேட் பாவனைக்கு அனுமதியளிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக ஆய்வுவொன்றினை மேற்கொண்டு புதிய கொள்கைகளை உருவாக்கவும் இதன் போது ஆலோசிக்கப்பட்டது.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவினை கட்டுப்படுத்தல் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கான பிரதான காரணமாக உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு இனங்காணப்பட்டதுடன், உணவுப் பொருட்களின் விலையை மேலும் கட்டுப்படுத்துவதற்கு தேவையான விடயங்களை கண்டறிந்து துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கும் சிபாரிசு செய்யப்பட்டது. இதனிடையே அரிசி மற்றும் தேங்காய் விலைக் கட்டுப்பாடு தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டது.

தேசிய பொருளாதார சபை, நுகர்வோர் சேவைகள் அதிகார சபை, மத்திய வங்கி ஆகியன ஏனைய உரிய நிறுவனங்களுடன் இணைந்து துரிதமான ஆலோசனைகளை முன்வைப்பதற்கும் அதனூடாக உணவுப் பொருட்களின் விலை உயர்வடைதலை கட்டுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டபோது பெருநகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, நீர்ப்பாசனம், போக்குவரத்து மற்றும் மின்சக்தி உள்ளிட்ட அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யாது வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் சிரமமாகுமென சுட்டிக்காட்டினார். அத்துடன் தகவல் தொழில்நுட்ப துறையின் அபிவிருத்திக்கான முதலீடுகளை அதிகரிக்க முன்னுரிமை வழங்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஏற்பட்டுள்ள அதிக இட நெருக்கடி காரணமாக பயணிகளுக்கான வளாகம் ஒன்றினை நிர்மாணிக்க வேண்டுமெனவும் இதற்காக ஜப்பான் அரசின் உதவி (JICA) கிடைக்கப்பெற்றுள்ள போதிலும் நிர்மாணப் பணிகளுக்கு ஏற்படும் அதிக செலவு காரணமாக தற்காலிக வளாகம் ஒன்றினை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதன்போது தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் சஜித் பிரேமதாஸ, அரசாங்க ஒப்பந்தங்களையும் நிர்மாணப் பணிகளையும் மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் செலுத்துவதற்கான செயன்முறையொன்றுடன் கூடிய தேசிய கொள்கை அவசியமெனத் தெரிவித்தார். வெவ்வேறு அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் நிர்மாணப்பணிகள் தொடர்பில் இத்தகைய பிரச்சினைகள் காணப்படுவதனால் நிர்மாணப்பணிகளில் தாமதங்கள் ஏற்படுகின்றன என தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தில் எந்தவொரு பிரதான உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனால் இரத்தினபுரி அதிவேக மார்க்கத்தின் நிர்மாணப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

வெளிநாட்டு வருமானங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய துறைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அதனூடாக அந்நியச் செலாவணியை அதிகளவு பெற்றுத்தரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஆடைக் கைத்தொழில், சுற்றுலா பயணத்துறை மற்றும் தேயிலை உற்பத்தி உள்ளிட்ட ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படும் பொருளாதார கொள்கையின் அவசியம் குறித்து அமைச்சர் சரத் அமுனுகம சுட்டிக் காட்டினார்.

தேசிய பொருளாதார சபையினால் எதிர்வரும் சில வாரங்களுக்குள் மேற்குறித்த பிரச்சினைகள் தொடர்பாகவும் இலங்கையின் ஏனைய பொருளாதார விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு குறுங்கால, இடைக்கால மற்றும் நீண்டகால பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, சரத் அமுனுகம, ரவூப் ஹக்கீம், ஜோன் செனவிரத்ன, சஜித் பிரேமதாஸ, துமிந்த திஸா நாயக்க, பைசர் முஸ்தபா, மகிந்த அமரவீர, மலிக் சமரவிக்கிரம, பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோரும் தேசியப் பொருளாதார சபையின் உறுப்பினர்களான ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, தேசிய பொருளாதார சபையின் பொதுச்செயலாளர் மற்றும் அதன் பொருளாதார விசேட நிபுணர் பேராசிரியர் லலித் சமரக்கோன் ஆகியோரும் இந் நிகழ்வில் பங்குபற்றினர். (இ-7)

# முன்னாள் காதலியைத் தாக்கி தங்கச் சங்கிலியை அபகரித்த விமானப்படை புலனாய்வாளர்

(கொழும்பு)

தனது முன்னாள் காதலியிடம் தன்னை மீண்டும் காதலிக்கக் கோரி, அவரை கடுமையாகத் தாக்கி அவரது தங்கச் சங்கிலியை அபகரித்த விமானப்படை புலனாய்வு உறுப்பினரான காதலனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நாரஹேன்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மதுபோதையில் இருந்த காதலனான விமானப் படையின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த தலைமை சிப்பாயை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


தாக்குதலுக்கு உள்ளான யுவதியும் அதே பகுதியைச் சேர்ந்தவர் எனவும் 21 வயதான குறித்த யுவதி நாரஹேன்பிட்டிய பகுதியில் உள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த யுவதி வேலை முடிந்து நாரஹேன்பிட்டி, ஜயகொத்த ஒழுங்கை ஊடாகச் சென்று கொண்டிருக்கும் போதே, குறித்த விமானப்படை புலனாய்வாளர் குடிபோதையில் அங்கு சென்றுள்ளார். அந்த யுவதி முன்னிலையில் சென்ற அவர் தன்னை மீள காதலிக்குமாறு மன்றாடியுள்ளார். இதன்போது யுவதி அதனை வன்மையாக மறுக்கவே கோபமடைந்த விமானப் படை புலனாய்வாளர் அந்த யுவதியை அந்த இடத்திலேயே கீழே விழுத்தி கடுமையாக தாக்கியுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது குறித்த நபர் தன் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அபகரித்து விட்டதாக அந்த யுவதி தெரிவித்தார். குறித்த இளைஞனை சோதனை செய்த பொலிஸார் அவரது காற்சட்டைப் பைக்குள் இருந்து தங்கச் சங்கிலியை மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நாரஹேன்பிட்டி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## 55 இலட்சம் ரூபா பெறுமதியான
# பத்து தங்க பிஸ்கட்டுகளுடன் இந்தியப் பிரஜைகள் மூவர் கைது



(கொழும்பு)

இந்தியாவில் வர்த்தக உதவியாளர்களாக பணியாற்றும் மூன்று இந்தியப் பிரஜைகள் 55 இலட்சம் ரூபா பெறுமதியுடைய 10 தங்க பிஸ்கட்டுகளுடன் நேற்று முன்தினம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இந்தியப் பிரஜைகள் மூவரும் தனியார் விமான சேவைக்கு உரித்தான விமானத்தில் இந்தியா நோக்கிப் பயணிக்க இருந்த நிலையில் அவர்கள் மீது சந்தேகம் கொண்ட சுங்கப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டதோடு அவர்களிடமிருந்து 55 இலட்சம் ரூபா பெறுமதியான 10 தங்க பிஸ்கட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-7)

# கடும் வெப்பத்துடனான காலநிலையால் கண்பார்வை குறைபாடு ஏற்படக் கூடும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பத்துடனான காலநிலை காரணமாக கண்பார்வை குறைபாடு மற்றும் கண்சார்ந்த நோய்கள் ஏற்படக் கூடும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கண் தொடர்பான விசேட நிபுணர்கள் இது தொடர்பான அறிவுறுத்தலை விடுத்துள்ளனர்.

சூரியன் உச்சம் பெற்றுள்ளமையே இதற்கான காரணம் எனவும் கண் தொடர்பான விசேட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மன்னார், கண்டி, புத்தளம், குருநாகல், பொலநறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய 6 மாவட்டங்கள் வெப்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தேசிய அரசை நீடிப்பது குறித்த ஒப்பந்தத்தை இரகசியமாகவேனும் வெளிப்படுத்துங்கள்

## கூட்டு எதிரணித் தலைவர் தினேஷ் கோரிக்கை



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை நீடிப்பது தொடர்பான ஒப்பந்தத்தை வெளிபடுத்தக்கூறியதால் பாராளுமன்றத்தில் ஆளும் எதிர்த் தரப்பினரிடையே வாக்குவாதம் நிலவியது. ஒப்பந்தத்தை பிரசித்திபடுத்த முடியாவிடின் இரகசியமாகவேனும் வெளிப்படுத்துங்கள் என கூட்டு எதிர்க்கட்சி குழுத் தலைவர் தினேஷ் குணவர்த்தன சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும் போதே கூட்டு எதிர்க்கட்சி குழுத் தலைவர் தினேஷ் குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியானது பல கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்த முன்னணியாகும். அவ்வாறு இருக்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரு கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அரசாங்கத்தை முன்னெடுப்பதில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தம் ஒன்றினை முன்னெடுத்துள்ளது என கூறியுள்ளது. அரசியல் அமைப்பின் 46/4 உறுப்புரிமையின் பிரகாரம் இரண்டு தரப்பினரும் உடன்படிக்கையினை முன்னெடுத்துச் செல்வதாக சபையில் தெரிவித்தனர்.

எனினும் இந்த விடயத்தில் மேலும் குழப்பங்கள் உள்ளன. இதில் பிரதான கட்சியுடன் ஏனைய கட்சிகள் இணைந்து செயற்படுமாயின் பாராளுமன்றத்தில் உடன்படிக்கை குறித்து வெளிப்படுத்த வேண்டும். அதேபோல் சபை அனுமதியினைப் பெற வேண்டும். எனினும் இவ்வாறு தேசிய அரசாங்கம் ஒன்றினை முன்னெடுப்பது குறித்து எந்தவொரு எழுத்துரு ஆவணமும் சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறான ஒப்பந்தம் ஒன்று இருக்கும் பட்சத்தில் மட்டுமே தேசிய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆகவே அவ்வாறான ஆவணம் ஒன்று இருக்குமாயின் அதனை சபாநாயகரிடம் ஒப்படைக்க வேண்டும். சட்ட விரோதமாக அமைச்சரவையை நடத்த முடியாது. இவ்வாறு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையில் இரகசியத்தன்மை இருக்குமாயின் சபாநாயகரிடம் ஒப்படைத்து ஆவணத்தை பார்க்க கோரிக்கைவிடும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் வெளிப்படுத்துவது சபாநாயகரின் கடமையாகும். அவ்வாறு இல்லாவிட்டால் இது அரசியல் அமைப்பினை முழுமையாக மீறி செயற்படும் வகையில் அமைச்சரவையினை கொண்டு நடத்தும் அரசியல் அமைப்புக்கு முரண்பட்ட செயற்பாடாக நாம் கருதுகின்றோம். எமது கோரிக்கைக்கு தெளிவான தீர்வு ஒன்றினை சபாநாயகர் பெற்றுத்தர வேண்டும். அரசியல்வாதிகளின் தீர்மானம் அல்ல எமக்கு அவசியமானது சபாநாயகரின் தீர்மானமாகும். அதனையே நாம் எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குண்டுவெடிப்பு தொடர்பாக கண்டறிய ஐவரடங்கிய குழு

## இராணுவத் தளபதி நியமனம்



(கொழும்பு)

தியத்தலாவையில் பேருந்தில் கைக்குண்டு வெடித்த சம்பவம் தொடர்பில் கண்டறிய ஐவரடங்கிய குழுவொன்றை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க நியமித்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் 12 இராணுவத்தினர் உள்ளிட்ட 19 பேர் காயமடைந்தனர்.

இராணுவ உறுப்பினர் ஒருவரின் பையிலிருந்த கைக்குண்டொன்றே இவ்வாறு வெடித்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இதேவேளை குறித்த சம்பவம் தீவிரவாதச் செயல் அல்ல என இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிந்தவை சு.கவிலிருந்து நீக்கிவிட்டு எதிர்க்கட்சித் தலைவராக்க வேண்டும்

## திஸ்ஸ விதாரண கோரிக்கை



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினராக இருப்பதுதான் எதிர்க்கட்சி தலைமைத்துவத்தை அவருக்கு வழங்குவதற்கு இடையூறாக இருக்குமாக கருதினால் அதனை நீக்கினாலும் எந்தப் பிரச்சினையும் இல்லை என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இதற்காக தாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வலியுறுத்துகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைமைத்துவத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கக் கோருகின்றமை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களிடம் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு 2015 ஆம் ஆண்டு தேர்தலில் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியது. ஆனால் மக்கள் அன்று செய்த தவறை உணர்ந்துவிட்டனர். அதனால் தான் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்து அதன் மூலம் சிறந்த பாடத்தை கற்பித்துள்ளனர். தமக்கான சேவையை வழங்கக் கூடிய உரிய தலைமைத்துவத்தை மக்கள் தங்களது வாக்குகள் மூலம் தெரிவு செய்துள்ளனர்.

எனவேதான் நாம் எதிர்க்கட்சி தலைமைத்துவத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குமாறு வலியுறுத்துகின்றோம். எனினும் எதிர்க்கட்சி தலைமைத்துவத்தை ஒப்படைப்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தயாராக இல்லை. ஆனால் நாம் இந்த விடயத்தில் அசாதாரணமாக இருக்கப்போவதில்லை.

எதிர்க்கட்சி தலைமைத்துவத்தை மகிந்தவுக்கு வழங்குவதற்கு எதிராக பல்வேறு கருத்துக்களை பல்வேறு தரப்பினரும் முன்வைக்கின்றனர். மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினராக உள்ளார். அதன் காரணமாக அவருக்கு எதிர்க்கட்சி தலைமைத்துவத்தை வழங்க முடியாது என்ற கருத்தினையும் ஒரு சாரார் முன்வைத்துள்ளனர்.

அதுதான் அவர் எதிர்க்கட்சி தலைமைத்துவத்தை வழங்குவதற்குத் தடையாக இருக்குமாக இருந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால மகிந்தவை தாராளமாக நீக்கலாம். அதனால் எமக்கு எந்தப் பாதகமான விளைவும் ஏற்படப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் களைப்படைய வைத்துவிட்டன

## மகிந்த தேசப்பிரிய சலிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தம்மைக் களைப்படைய வைத்து விட்டதாகவும், தமக்கு ஓய்வு தேவைப்படுகிறது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

"உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பான வேலைகளை மேற்கொண்டு நான் மிகவும் களைத்து விட்டேன்.

இந்த வேலைகளையெல்லாம் யாரிடமாவது கொடுத்துவிட்டு குறைந்தது ஒரு மாதத்துக்கு விடுமுறையில் சென்று ஓய்வெடுப்பதே நல்லது என நினைக்கிறேன். இதற்கு அரசியலமைப்பு இடமளித்திருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விபரங்களை அரசிதழில் வெளியிட்ட பின்னர், இதுபற்றி நான் யோசிக்கவுள்ளேன்.

வேறு காரணங்கள் எதுவுமில்லை. நான் மிகவும் களைத்துப் போய் விட்டேன்" என்றும் அவர் சலிப்புடன் தெரிவித்தார். (இ-7)

# சுதந்திரதின ஞாபகார்த்த முத்திரையை வெளியிடுவதில் தொடரும் தாமதம்

(கொழும்பு)

சுதந்திர தின ஞாபகார்த்த முத்திரையை வெளியிடுவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி கொண்டாடப்பட்ட இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பொது நிர்வாக அமைச்சின் தலையீட்டின் மூலம் ஞாபகார்த்த முத்திரையொன்றை வெளியிட நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் குறித்த முத்திரையின் முதல் நாள் வெளியீட்டின்போது அரச தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கையொப்பம் மற்றும் பதவி முத்திரை என்பவற்றை இட வேண்டியது மரபாகும்.

தேர்தல் பிரசாரங்கள் மற்றும் ஏனைய அலுவல்கள் காரணமாக சுதந்திர தினத்துக்கு முன்னதாக ஜனாதிபதியின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை இடப்படுவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக சுதந்திர தினத்தன்று குறித்த முத்திரை வெளியிடப்படவில்லை.

அதன் பின்னரும் இன்று வரை உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள அதிக வேலைப்பளுவினால் ஜனாதிபதி குறித்த முத்திரை வெளியீட்டிற்கு தனது கையொப்பத்தை இடவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதன்காரணமாக முத்திரை வெளியிடப்படுவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் முத்திரை சேகரிப்பாளர்கள் இது தொடர்பில் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-7)

# பாரதம்

## பெண்களின் வாழ்வில் துணிவை வளர்க்க வேண்டும்-சோபி ட்ரூடோ



(டில்லி)

பெண்கள் தமது வாழ்வை பயமின்றி எதிர்கொள்ள வேண்டும் என, இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள கனேடியப் பிரதமரின் துணைவியார் சோபி ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை டில்லியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பாடசாலை மாணவிகள் முன் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"பெண்களாக வளர்வதில் நீங்கள் பல்வேறு சவால்களை சந்திக்க நேரிடுகிறது. அதனால் மிகுந்த இன்னலுக்கு ஆளாகி வருகிறீர்கள். எனவே நீங்கள் துணிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உங்களால் இந்த உலகை பயமின்றி தைரியமாக துணிச்சலுடன் எதிர்கொள்ள முடியும்.

நான் மன்னர்கள், ராணிகள் மற்றும் பிரபலமானவர்களை சந்தித்து வருகிறேன். ஆனால் அவர்களை பார்ப்பதை விட உங்கள் வயதுடைய பெண்களை பார்க்கும் போது தான் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

உங்களுடன் பேசி பழகிய அனுபவங்களை எனது மகனுக்கு அவசியம் சொல்வேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## ரஷ்யாவின் வி.வி.இ.ஆர். அணுஉலைக்கு உயர் விருது

(மொஸ்கோ)

உலகிலேயே முதல் முறையாக ரஷ்யாவின் அணு உலைக்கு பாதுகாப்புடன் கட்டமைக்கப்பட்ட அணு உலை என்ற சர்வதேச விருது வழங்கப்பட்டிருக்கிறது. 1200 மெகா வோட் மின்னுற்பத்தித் திறன் கொண்டது.


இதுகுறித்து ரஷ்ய அணுமின் நிலைய அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், மையக் கட்டுப்பாட்டு அறையில் இருந்து தான், அணுமின் நிலையம் முழுவதும் இயக்கப்படுகிறது. டர்பைன்கள், முக்கிய உபகரணங்கள் போன்றவற்றை கட்டுப்படுத்த 6 பேர் இங்கு பணியில் இருப்பார்கள் என்று தெரிவித்தார்.


1200 மெகா வோட் வி.வி.இ.ஆர். அணு உலை உலகின் பல்வேறு நாடுகளில் கட்டுமானப்பணியில் இருந்தாலும் உலகத்திலேயே முதல் முறையாக இங்கு தான் அமைக்கப்பட்டது. மேலும் இந்த கட்டுப்பாட்டு அறையில் பணியாற்றும் பணியாளர்கள் பல்வேறு கட்ட பயிற்சிக்குப் பின்னர் இங்கு அழைத்து வரப்பட்டு இதன் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# மோடி-ட்ரூடோ கு
# நெகிழ்ச்சியான ச









(டில்லி)

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்று ஜனாதிபதி மாளிகை வந்தபோது பிரதமர் மோடி கட்டியணைத்து வரவேற்றார்.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது குடும்பத்தினருடன் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்றுக் காலை ஜனாதிபதி மாளிகை சென்றார். காரில் இருந்து இறங்கிய

## ஜெயலலிதா மரணம் குறித்து விசாரணை; முன்னாள் டி.ஜி.பியிடம் வாக்குமூலம்

(சென்னை)

ஜெயலலிதா மரணம் குறித்து உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது. ஆணையம் விசாரணை நடத்த யாருக்கும் அழைப்பாணை அனுப்பவில்லை.

முன்னாள் டி.ஜி.பி. ராமானுஜம் நேற்று முன்தினம் காலை 10.10 மணிக்கு விசாரணை ஆணையம் எங்கு உள்ளது? என்று விசாரித்து வந்தார். அங்கு செயலாளர் கோமளாவிடம் தன்னை அறிமுகம் செய்து கொண்டு, ஆணையம் ஏற்கனவே அழைப்பாணை அனுப்பி இருந்ததால் தனது வாக்குமூலத்தை அளிக்க வந்துள்ளதாக கூறினார்.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது ராமானுஜம் சட்டம்-ஒழுங்கு டி.ஜி.பியாகவும், தமிழக அரசு ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். ஜெயலலிதா அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது மாநில தகவல் ஆணையராக பணியாற்றினார்.

போயஸ் கார்டனில் இருந்து சசிகலா வெளியேற்றப்பட்டபோது உளவுப்பிரிவு டி.ஜி.பியாக பணியாற்றிய அவர், ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்ததால் அவரிடம் ஆணையம் விசாரணை நடத்த அழைப்பாணை அனுப்பி இருந்தது. 2 முறை கால அவகாசம் கோரிய அவர் நேற்று முன்தினம் காலை திடீரென்று ஆஜரானார். அவரிடம் காலை 10.30 மணிக்கு விசாரணை தொடங்கியது.

விசாரணையின்போது, ஜெயலலிதா-சசிகலா இடையே ஏதேனும் பிரச்சினை இருந்ததா? சசிகலா உறவினர்கள் யார், யாரெல்லாம் போயஸ் கார்டன் வந்துசென்றனர்? என்பது போன்ற பல கேள்விகளை நீதிபதி கேட்டார். நீதிபதி கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் ராமானுஜம் பதில் அளித்துள்ளார்.

ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவரை நேரில் பார்த்தீர்களா? என்று நீதிபதி கேட்டதற்கு, தொந்தரவாக இருக்கும் என்று கருதி மருத்துவமனைக்கு சென்று பார்க்கவில்லை என்றும், போயஸ் கார்டன் திரும்பியதும் பார்க்கலாம் என்று இருந்ததாகவும் கூறினார்.

பிற்பகல்1 மணி வரை இரண்டரை மணி நேரம் அவரிடம் விசாரணை நடந்தது. ஆணையத்தில் இருந்து வெளியே வந்த அவரிடம் ஆணையத்தில் நடந்த விசாரணை குறித்து நிருபர்கள் கேட்ட போது, ஆணையத்துக்கும் தனக்கும் இடையேயான விவகாரம் என்றும், இது குறித்து எதுவும் தெரிவிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

ராமானுஜம் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சசிகலா குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு அழைப்பாணை அனுப்பி அவர்களிடம் விசாரணை நடத்த ஆணையம் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (10)

## சீனாவில் போக்குவரத்து ஸ்தம்பித்தது 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட கார்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பு



(பீஜிங்)

சீனாவில் ஹைனான் மாகாணத்தில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக கப்பல் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. ஹைனான் பகுதிக்கு செல்ல வேண்டிய வாகனங்கள் மொத்தமும் துறைமுகங்கள் அருகே உள்ள சாலையில் நிறுத்தப்பட்டு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சீனாவில் ஏற்பட்டுள்ள கடும் பனிப்பொழிவால் அங்குள்ள பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் கடும் பனிமூட்டத்தால் ஹைனான் மாகாணத்திற்கு செல்ல வேண்டிய கப்பல் போக்குவரத்து இரத்து செய்யப்பட்டது. இதனால் ஹைனான் தீவுக்கு செல்ல வேண்டிய சுமார் 11,000க்கும் மேற்பட்ட கார்கள் உள்ளிட்ட வாகனங்கள் துறைமுகங்கள் அருகே உள்ள வீதியில் நிறுத்தப்பட்டதில் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதற்கிடையே போக்கு வரத்து நெரிசலால் இலட்சக்கணக்கான மக்கள் இரவு முழுவதும் வீதியில் பொழுதை கழித் துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மறுநாள் காலை விடிந்த பின்னரே கப்பல் போக்குவரத்து ஆரம்பித்ததாகவும், ஆனால் போக்குவரத்து நெரிசல் குறைய வெகு நேரமானதாகவும் துறைமுக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (10)

# வெளிநாடு

# குடும்பம் சந்திப்பு



அவுரை பிரதமர் மோடி கட்டியணைத்து வரவேற்றார். பின்னர் அவருக்கு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. முப்படை அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

கனடா பிரதமரை மத்திய அரசு புறக்கணிப்பதாக விமர்சனம் எழுந்துள்ள நிலையில், அவருக்கு ஜனாதிபதி மாளிகையில் வரவேற்பு அளித்ததும், மோடி நேரில் சென்று வரவேற்றதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்த சந்திப்புக்கு பிறகு கனடா பிரதமர், டில்லி ராஜ்காட்டில் உள்ள காந்தி நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார். வெளியுறவுத்துறைஅமைச்சர் சுஷ்மா சுவராஜையும் சந்தித்து பேசினார். (10)

# ஆஸி துணைப் பிரதமர் இராஜினாமா சர்வதேச அரசியலில் பெரும் பரபரப்பு

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய துணை பிரதமர் பார்னபி ஜாய்ஸ் தனது கட்சியின் தலைவர் மற்றும் துணை பிரதமர் பதவிகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவினூடாக இந்த தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

அவருடைய முன்னாள் ஊடக செயலாளருடனான கூடுதல் திருமண விவகாரம் கடந்த சில வாரங்களாக அவுஸ்திரேலிய அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி இருந்த நிலையில் தனது பதவியை இராஜினாமா செய்வதாகவும் தனக்கு ஆதரவளிக்கும் நியூ இங்கிலாந்து மக்களுக்கு நன்றி கூற விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

தேசிய க்ட்சியின் தலைவர் பதவியில் இருந்து பார்னபி ஜாய்ஸ் விலகுவது தொடர்பாக எதிர்க்கட்சிகளினால் கேள்வி எழுப்பப்பட்டிருந்த நிலையில் அதற்கு பதிலளித்த ஜாய்ஸ் தற்போது ஏற்பட்டுள்ள சலசலப்பை கட்டுப்படுத்துவதற்காக கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் தான் வேறெந்த தவறும் செய்யவில்லை எனவும்ஜாய்ஸ்மறுத்துள்ளார்.




பார்னபி ஜாய்ஸின் பதவி விலகலை தொடர்ந்து தேசிய கட்சிக்கு புதிய தலைவர் தேர்தெடுக்கப்படவுள்ள நிலையில் டேன்புல்லின் லிபரல் கட்சி கூட்டணி உடன் படிக்கையின் அடிப்படையில் துணை பிரதமராக அவரே செயற்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் துணைப் பிரதமரின் திடீர் இராஜினாமா அறிவிப்பு சர்வதேச அரசியலில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (10)

# ட்ரூடோ கலந்து கொண்ட நிகழ்வில் காலிஸ்தான் தீவிரவாதிக்கு அழைப்பு கனடாவை இழிவுபடுத்தும் செயல் பிரதமர் எச்சரிக்கை

(டில்லி)

டில்லியில் கனடா தூதர் அளிக்கும் விருந்து நிகழ்ச்சியில் காலிஸ்தான் பயங்கரவாதிக்கு அழைப்பு விடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கனடா தூதர் ஜஸ்டின் ட்ரூடோ எச்சரித்துள்ளார்.



கனடா, ஐரோப்பா, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளில் தடை செய்யப்பட்ட காலிஸ்தான் சீக்கிய அமைப்பின் உறுப்பினராக இருப்பவர் ஜஸ்பால் அத்வால். 1986 ஆம் ஆண்டு பஞ்சாப் அமைச்சர் ஒருவரை கொலை செய்ய முயற்சித்த வழக்கில் குற்றவாளி என அறிவிக்கப்பட்டவர். இவருடன் தற்போது இந்தியா வந்துள்ள கனடா பிரதமரின் மனைவி புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ளார். மேலும், அவர் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு இந்தியாவுக்கான அந்நாட்டு தூதர் ஏற்பாடு செய்த விருந்து நிகழ்ச்சிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இது வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியதை தொடர்ந்து, அந்த நிகழ்ச்சி இரத்து செய்யப்பட்டது.

இது தொடர்பாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிக்கையில்,

உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடுகள் இந்தியா, கனடா ஆகும். ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதில் கனடாவும் இந்தியாவும் உறுதியாக இருக்கிறதுஇ

காலிஸ்தான் பயங்கரவாதி ஜஸ்வால் அத்வாலை அழைத்த நபர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இந்த பிரச்சினை குறித்து நாங்கள் தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகிறோம். பிரச்சினைக்குரிய நபருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கக் கூடாது. இதற்கு காரணமான நபர் மற்றும் துறை முழு பொறுப்பேற்று கொள்ள வேண்டும். இச் செயற்பாடு கனடாவை இழிவுபடுத்துவதாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே, பயங்கரவாதி ஜஸ்பால் அத்வாலுக்கு இந்தியா விசா கிடைத்தது தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (10)


# மிகச்சிறிய பென்சிலை உருவாக்கி இந்திய இளைஞன் புதிய சாதனை

(டில்லி)

உலகில் மிகச்சிறிய பென்சிலை உருவாக்கி இந்திய இளைஞன் சாதனை படைத்துள்ளார்.

உத்தரகாண்ட் பகுதியைச் சேர்ந்த பிரகாஷ் சந்திரா உபாத்தே என்ற இளைஞன் இவ்வாறு சாதனை படைத்துள்ளார். குறித்த பென்சில் 5 மில்லி மீற்றர் நீளமும், 0.5 மில்லி மீற்றர் அகலமும் கொண்ட மரத்தாலான பென்





சிலாகும். பென்சிலை உருவாக்க 3 முதல் 4 நாட்கள் எடுத்துள்ளதாக பிரகாஷ் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிரியா போர் நிறுத்த தீர்மானத்துக்கு ஐ.நாவில் ரஷ்யா முட்டுக்கட்டை!

(டமாஸ்கஸ்)

சிரியா உள்நாட்டுப் போரில் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள கவுட்டா நகரை மீட்பதற்காக, ரஷ்ய படைகளின் ஆதரவுடன் ஜனாதிபதி ஆதரவு படைகளின் கடும் போர் நடைபெற்று வருகின்றது. கிழக்கு கவுட்டா பகுதியில் கடந்த 18 ஆம் திகதி இரவு முதல் இடம்பெற்ற தாக்குதலில் இதுவரை 500 இற்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலியானவர்களில் 100 இற்கும் மேற்பட்டோர் குழந்தைகள்.

இந்நிலையில் அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டாலும், தீவிரவாதிகளிடம் இருந்து கவுட்டா நகரை விடுவிப்பதற்குத்தான் தாக்குதல் நடைபெறுவதாக சிரிய அரசு தெரிவித்து வருகின்றது. "கிழக்கு கவுட்டாவில் நடந்துள்ள தாக்குதல் கற்பனை செய்து பார்க்க முடியாத பயங்கரமான தாக்குதல்" என ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. நிவாரணப் பொருட்கள் சென்றடைவதற்கு வசதியாக போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று ஐ.நா. சபை வலியுறுத்தியுள்ளது.

சிரியாவில் 30 நாட்கள் போர் நிறுத்தம் கொண்டு வரவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் அவையின் பாதுகாப்புக் குழுவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது உடன்பாடு ஏற்படவில்லை என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்த கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட போர் நிறுத்தத்துக்கான தீர்மானத்தில் ரஷ்யா திருத்தம் கோரியுள்ளதாக ஐ.நாவுக்கான ரஷ்ய தூதர் வாசிலி நெபன்சியா தெரிவித்துள்ளார். (10)

வரவேற்றார்.
ருடோ தனது
வில் சுற்றுப்
னடா பிரதமர்
ல ஜனாதிபதி
ந்து இறங்கிய

பித்தது
ார்கள்
ருப்பு

ிக்கப்பட்டுள்
. இந்நிலை
நேற்று முன்
ம் கடும் பனி
டத் தால்
றனான் மாகா
ந்திற்கு செல்ல

த்து இரத்து
ான் தீவுக்கு
கும் மேற்பட்ட
கள் துறைமு
ில் நிறுத்தப்
ஏற்பட்டது.
து நெரிசலால்
வு முழுவதும்
ள்ளதாகவும்

னரே கப்பல்
ும், ஆனால்
வெகு நேர
கள் தெரிவித்
(10)

# இயந்திரக் கோளாறால் அவசரமாக தரையிறக்கப்பட்ட சுவிஸ் விமானம்

(சுவிஸ்)

ஸ்பெயின் - பார்சிலோனா நகரில் இருந்து சூரிச் வந்த விமானம் தொழில் நுட்பக் கோளாறு காரணமாக 'பிரான்ஸில்' தரையிறக்கப் பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பார்சிலோனா நகரில் இருந்து 'LX 1957' என்ற விமானம் சுவிட்சர்லாந்தின் சூரிச் நகருக்கு புறப்பட்டு சென்றுள்ள வேளையில் விமானத்தின் காக்பிட்டில் இருந்து வித்தியாசமான வாசம் வந்தது மட்டுமன்றி கட்டுப்பாட்டு கருவிகளில் இருந்து எச்சரிக்கை செய்தியும் வெளியாகியதை அடுத்து இவ் விமானம் அவசர அவசரமாக பிரான்ஸ் நாட்டின் 'மார்ஸைல்' நகர விமான நிலையத்தில் பத்திரமாக தரையிறக்கப்பட்டது.

மேலும் விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு தொடர்பில் உறுதியான தகவல்கள் எதுவும் வெளியாகாத நிலையில் பயணிகள் அனைவரையும் மார்ஸைல் நகரில் உள்ள விடுதியில் வைக்கப்பட்டு நேற்றுக் காலை வேறு விமானத்தில் பயணிகள் சூரிச் நகரை சென்றடைந்தனர். (10)

# காஷ்மீர் எல்லையிலிருந்த பாக்.இராணுவ அரண் இந்திய இராணுவத்தினரால் முற்றாகத் தகர்ப்பு

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் சர்வதேச எல்லை கடடுப்பாட்டு கோட்டின் அருகில் செயற்பட்டு வந்த பாகிஸ் தான் இராணுவ அரண் இந்திய இராணுவத்தினர் நேற்று முன்தினம் தகர்த்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் பூஞ்ச் மாவட்டத்தில் சர்வதேச எல்லை கட்டுப்பாட்டு கோடு அருகில் பாகிஸ்தான் இராணுவ மையம் செயற்பட்டு வந்தது.

இந்நிலையில், பூஞ்ச் மாவட்டத்தின் மென்டார் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை அத்துமீறி தாக்குதல் நடத்தினர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இந்திய இராணுவத்தினரும் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவ நிலை முற்றிலும் தகர்க்கப்பட்டு விட்டதாகவும் பாதிப்பு விபரங்கள் குறித்த தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை என இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (10)

# மாகாண சபைத் தேர்தல்கள் செப்டெம்பர் மாதம் நடக்கும்

## மகிந்த தேசப்பிரிய தகவல்



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான பதவிக்காலம் எதிர்வரும் செபடெம்பர் மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில், அதனைத் தொடர்ந்து சபைகளை கலைத்து தேர்தலை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடமத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகள் ஏற்கனவே கலைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், எனினும் தேர்தலை எப்போது நடத்துவது என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# குவைத் தேசிய தின நிகழ்வில் பிரதம விருந்தினராக ரவூப் ஹக்கீம்





(கொழும்பு)

குவைத் நாட்டின் 57 ஆவது தேசிய தின நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வு கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது.

குவைத் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாஃ வுதாஹிர் தலைமையில் குறித்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உள்நாட்டு கட்டட வடிவமைப்பாளர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்- சஜித் அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகளின் போது உள்நாட்டு கட்டட வடிவமைப்பாளர்களுக்கு முதலிடம் வழங்கப்படும் என்று வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதற்காக கட்டட வடிவமைப்பாளர்களின் கூடுதலான பங்களிப்புக்களைப் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை கட்டட வடிவமைப்பாளர் நிறுவகத்தின் 35 ஆவது நிறைவாண்டு நிகழ்வில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவரின் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ஏற்பு

(கொழும்பு)

பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமாரி விஜேவர்த்தனவின் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக் கொண்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமாரி விஜேவர்த்தன பதவியை விட்டு விலகியுள்ளார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், அவர் பதவி விலகவில்லை என்று வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு பதவியில் இருக்கும் உடன்பாட்டின் அடிப்படையிலேயே அவர் பிரித்தானியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டார் என்றும், அந்த உடன்பாடு எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவடைவதாகவும், வெளிவிவகார அமைச்சு விளக்கமளித்துள்ளது.

அதேவேளை, பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் அழுத்தங்களால், லண்டனில் உள்ள இலங்கைத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, கொழும்புக்குத் திருப்பியழைக்கப்பட்ட விவகாரத்தை அடுத்தே, அமாரி விஜேவர்த்தன தனது பதவியை விட்டு விலகியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவரது பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### இயற்கையை ஏற்கும் மனம்!

"வெளியில் போகலாம்னு புறப்பட்டேன். சனியன் பிடிச்ச மழை வந்து காரியத்தைக் கெடுத்துவிட்டது" என்று இயற்கையைத் திட்டுகிறவர்கள் பலர்.

அந்த நேரத்தில் இவர்கள் எதிரில் சிக்குகிறவர்களை வேறு குதறி எடுப்பதுண்டு.

புடைசூழச் சுற்றுலா செல்கிறோம். போகிற இடத்தில் மழை. எல்லோரும் மழையைத் திட்டித் தீர்க்கமாட்டார்களா? ஆனால் இது ஓர் அறிவற்ற செயல்.

குளிர்கிறதே என்று சலித்துக் கொள்கிறவர்கள்; வெயிலடிக்கிறதே என்று வெறுத்துப் பேசுகிறவர்கள்; மழை பெய்யவில்லையே என்று வெதும்புகிறவர்கள் ஆகியோருக்கெல்லாம் சில வார்த்தைகள் காத்திருக்கின்றன.

இயற்கை ஆதிக்கம் செலுத்துகிற நேரம் போக மீதமிருக்கும் நேரம் தான் நமக்கு என்கிற மனப்பக்குவம் அவசியம் தேவை.

இயற்கையைக் கட்டுப்படுத்துகிற சக்தி நமக்கு இல்லை. எனவே அதன் வழியே செல்ல நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

பருவ நிலையைப் பொறுத்தவரை வளைகுடா நாடுகளில் 42 டிகிரி வெயில், உலகில் சில பகுதிகளில் மைனஸ் 42 டிகிரி குளிர். அதாவது ஃப்ரிஜ்ஜுக்குள் உட்கார்ந்திருப்பதை விடக் குளிர்.

இந்தப் பகுதியில் வாழும் மனிதர்கள் கூட முடிந்தவரை இயல்பு வாழ்க்கை வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

ஆனால் நம்மில் பலர் என்ன சொல்கிறோம்? வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கு. வேலையை நாளைக்குப் பார்த்துக்கலாம் என்கிறோம். வெளியில் தலை தெறிக்கிற வெயில். எவன் போவான் கடைக்கு என்கிறோம்.

ஆக, ஒன்று இயற்கையைத் திட்டத் தெரிந்து வைத்து இருக்கிறோம். அல்லது அதைச் சாக்காக்கிக் கொண்டு செய்ய வேண்டிய வேலைகளை, ஆக வேண்டிய கடமைகளைச் செய்யாமல் இழுத்தடிக்கிறோம்.

மழையாலும் வெயிலாலும் குளிராலும் உண்மையிலேயே கெடுகின்ற வேலைகள் சில உண்டு. அப்படிக் கெடும் போது, இரண்டு விடயங்களைக் கவனத்தில் கொள்வது நல்லது.

முதலாவது நம்முடைய மனநிலை கெட்டுவிடாமல் (Mood out) பார்த்துக் கொள்வது. இரண்டாவது வேலை கெட்டுவிட்டதே என்று கவிழ்ந்தடித்துப்படுத்துக் கொள்ளாமல் மாற்று ஏற்பாடுகளைக் கவனிப்பது, மாற்று வேலைகளைச் செய்வது.

பருவ நிலை என்பது அடிக்கடி மாறுவது. அதையும் நம் மனநிலையையும் சம்பந்தப்படுத்திக் கொள்ளக் கூடாது.

எல்லாம் போக நம்மை நாமே ஒரு கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்.

" நமக்குச் சாதகமான பருவநிலை இருந்த போது நாம் என்ன சாதித்தோம்" என்பதே அந்தக் கேள்வி".

**லேனா தமிழ்வாணன்**

# சீனி, பருப்பு இறக்குமதிக்கு உரிமம் தேவையில்லை

## அமைச்சர் றிசாத் நாடாளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

சீனி மற்றும் பருப்பு ஆகியனவற்றை இறக்குமதி செய்யும்போது, உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லையென தெரிவித்த அமைச்சர் றிசாச் பதியுதீன், அவ்விரு பொருட்களையும் தனியார் வியாபாரிகளும் இறக்குமதி செய்யலாம். அதற்கு தடைகள் இல்லை என்றும் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போது, ஹேஷான் விதானகே எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இவ்விரு பொருட்களை தனியார் வியாபாரிகள் இறக்குமதி செய்வதற்கு தடை ஏதும் இல்லை. இந்த நடவடிக்கைகளில் 100 வியாபாரிகள் செயற்படுகின்றனர்.

திறந்த முறையின் மூலமாகவே, இந்த இறக்குமதி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அரசாங்க நிறுவனங்கள் எவற்றினதும் தலையீடுகளும் இதில் இல்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




கேலிச்சித்திரம்

# வாட்டுகிறது வரட்சி; 293,868பேர் பாதிப்பு

(கொழும்பு)

ஐந்து மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள கடுமையான வரட்சியால், 91,858 குடும்பங்களைச் சேர்ந்த, 2 இலட்சத்து 93 ஆயிரத்து 868 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த மத்திய நிலையம் வெளியிட்டுள்ள புள்ளிவிவர தகவலின் பிரகாரம், ஜனவரி மாதம் முதல், பெப்ரவரி 21 ஆம் திகதி வரையிலுமான காலப்பகுதியிலேயே ஐந்து மாவட்டங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

புள்ளிவிபர தகவலின் பிரகாரம், ஆகக் கூடுதலாக புத்தளம் மாவட்டத்தில், 66,436 குடும்பங்களைச் சேர்ந்த 216,018 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொலநறுவை மாவட்டத்தில் ஆகக் குறைவாக, 250 குடும்பங்களைச் சேர்ந்த 990 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த மாவட்டங்களுக்கு தேவையான குடிநீர் வசதிகள், பவுசர்களின் மூலமாக, விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவென, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் சான் பத்திரண மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பசிலுக்கு எதிரான வழக்கு ஜூன் 4இல் விசாரணைக்கு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை, எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளதாக, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆர். ஹெயியன்துடுவ உத்தரவிட்டுள்ளார்.

வழக்கின் சாட்சியாளர்கள் அன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, 365 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஜீ.ஐ.சி குழாய் விநியோகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பிலேயே, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட இருவருக்கு எதிராக, குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (இ-7)

# உடல் தகுதி சோதனைக்குப் பின்னரே அதிபர்களுக்கு இனி தலைமைத்துவ பயிற்சி!

## கல்வி அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

தலைமைத்துவப் பயிற்சியின் போது பாடசாலை அதிபர் உயிரிழந்த சம்பவத்தில் தவறு நிகழ்ந்திருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அதிபர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னர் அவர்களின் உடல் தகுதியை பரிசீலிப்பதற்கும், கடுமையான பயிற்சிகளை நிறுத்துவதற்கும் எதிர்பார்த்திருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் டலஸ் அழகப்பெரும எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தனது கேள்வியை முன்வைத்த டலஸ் அழகப்பெரும, அம்பாந்தோட்டையைச் சேர்ந்த பாடசாலை பெண் அதிபர் உயிரிழந்த சம்பவம், தனியார் பயிற்சி நிலையமொன்றில் இடம்பெற்றுள்ளது. இங்கு பெற்றுக் கொடுக்கப்படும் பயிற்சியின் தரம் தொடர்பில் கேள்வி உள்ளது.

அது மாத்திரமன்றி 53 வயதுடைய ஒருவருக்கு வழங்கப்பட்ட பயிற்சி பற்றிய கேள்வியும் உள்ளது. குறித்த அதிபர் உயிரிழந்தமை தொடர்பில் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. இதன் உண்மைத் தன்மை என்ன எனக் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் குறிப்பிடுகையில், இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடியான விசாரணையை நடத்துமாறு பணித்திருப்பதுடன், விசாரணை அறிக்கை கிடைத்த பின்னரே உண்மையான காரணத்தைக் கூற முடியும். இதுவரை கிடைத்த தகவல்களுக்கு அமைய சில ஊடகங்கள் பொய்யான தகவல்களை வெளியிட்டுள்ளன.

அதிபர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பயிற்சிகளை வழங்குவது தொடர்பில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டே தனியார் நிறுவனங்களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏதாவது தவறு இடம்பெற்றிருந்தால் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளோம். இந்த அதிபர் ஏற்கனவே கடேட் பயிற்சி பெற்றவர் என்பதுடன், குறிப்பிட்ட பயிற்சி கட்டாயமானது இல்லையென்றபோதும் அவர் தானாக முன்சென்றுள்ளார் என தகவல் கிடைத்துள்ளது என்றார்.

அதேநேரம், 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் பாடசாலை அதிபர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் இராணுவத்தினரின் பங்களிப்புடன் வழங்கப்பட்டிருந்தன. எனினும் 2015ஆம் ஆண்டின் பின்னர் மோசமான நிலைமையைக் குறைத்து தலைமைத்துவப் பயிற்சிக்கான பாடநெறியை நாம் தயாரித்திருந்தோம். பாடசாலைகளில் மாணவர்களை விளையாட்டுப் போட்டிக்கு எடுக்கும்போது உடற்பரிசோதனை செய்யப்படுகிறது.

இதனால் ஏற்படும் காலதாமதத்தால் பல மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுப்பதில்லை. இதுபோன்று அதிபர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளுக்கு முன்னர் அவர்களின் உடல் தகுதி மற்றும் உடலில் உள்ள சக்தியை பரிசீலிப்பதற்கான திட்டமொன்று அவசியமாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாணவியின் காதில் இரத்தம் வரும் வகையில்

# ஆசிரியர் அறைந்தது குறித்து பொலிஸார் விசாரணை!

(கொழும்பு)

வலைப்பந்தாட்ட பயிற்சிக்கு வர மறுத்த மாணவியின் கன்னத்தில் ஆசிரியர் பலமாக அறைந்ததால் காதில் இரத்தம் வந்த நிலையில் குறித்த மாணவி கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொத்மலை கல்வி வலயத்தில் அமைந்துள்ள பாடசாலையொன்றிலேயே கடந்த 21 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மாணவியின் பெற்றோர் புஸல்லாவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தரம் பத்தில் கல்வி கற்று வந்த குறித்த மாணவி பாடசாலையை விட்டு வெளியேறிய வேளையில் வலைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளரான ஆசிரியர் குறித்த மாணவியை பயிற்சிக்கு வருமாறு அழைத்துள்ளார்.

இதன்போது மாணவி தனக்கு சுகயீனம் காரணமாக இன்று வர முடியாது என கூறிய சந்தர்ப்பத்திலேயே மேற்படி ஆசிரியர் மாணவியின் கன்னத்தில் பலமாக அறைந்ததாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை புஸல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# நல்லிணக்க அலைவரிசையின் நோக்கம் என்ன?

## அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சர் என்ற முறையில் விசேட நல்லிணக்க தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றை ஆரம்பிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் விசேட வரவு-செலவுத் திட்டப் பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார்.

இதனடிப்படையில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நேத்ரா அலைவரிசையில் விசேட நல்லிணக்க தொலைக்காட்சி அலைவரிசையானது கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத் தொலைக்காட்சி அலைவரிசையின் முக்கிய நோக்கமானது பல் கலாசார, பல்லின, பன்மத சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு ஊக்கமளிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்களான பல்லினத் தன்மையின் செழிப்பு மற்றும் ஒருமைப்பாட்டை மேம்படுத்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்த முனைதல், பன்மைத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த சமூகம் என்பவற்றை கட்டியெழுப்புதல் மூலம் உருவாக்கி இந் நாட்டில் பல்வேறுபட்ட இன, மத சமூகங்களிடையே நிலைபேறான சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதேயாகும் என தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.



விசேட நல்லிணக்க தொலைக்காட்சி அலைவரிசையை உருவாக்குவதற்கு இவ்வமைச்சின் விசேட வரவு-செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியான ரூபா.180 மில்லியன் ஒதுக்கப்பட்டது. பொருத்தமான அலைவரிசையை பெற்றுக்கொள்வதற்காக கொக்காவில், யாழ்ப்பாணம், மடோல்சீமை, ஹந்தானை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் புதிதாக அலைபரப்பிகள் நிறுவப்பட்டன. ஆரம்பத்தில் நல்லிணக்க தொலைக்காட்சி அலைவரிசையினூடாக ஆவணப் படங்களும் இசை நிகழ்ச்சிகளுமே ஒலிபரப்பப்படும். எனினும் யாழ்ப்பாணத்தில் புதிதாக கலையகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்ட பின்னரே முழுநேர ஒலிபரப்புகள் விரிவாக்கப்படும். வட மாகாண மக்களுக்கு இக்கலையகமானது கல்வி, கலாசார மற்றும் சமூக நிகழ்ச்சிகள் தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது என தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

விசேட நல்லிணக்க தொலைக்காட்சி அலைவரிசையானது வடக்கு-தெற்கு கலந்துரையாடலை உருவாக்கி, நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாட்டை வலுவூட்ட உதவுகின்றது. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமானது இந் நல்லிணக்க தொலைக்காட்சி அலைவரிசையினூடாக நல்லிணக்கம் மற்றும் சமாதானம் பற்றிய தகவல்களை நாடு பூராகவும் பரப்புவதுடன் சமாதானத் தூதுவர்களையும் தலைவர்களையும் பலப்படுத்தி அவர்களை நிலைபேறான சமாதானத்தை உருவாக்கும் தலைவர்களாகவும், வசதியளிப்பவர்களாகவும் விளங்கச் செய்கின்றது.

விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய சில நிகழ்ச்சி ஒலிபரப்புகளால் நேத்ரா அலைவரிசையின் ஒலிபரப்பு நேரம் பங்கிடப்படுவதனால் நேத்ரா அலைவரிசை நிகழ்ச்சி ஒலிபரப்புகளில் தடங்கல் ஏற்படுத்தப்பட்டது. நல்லிணக்க தொலைக்காட்சி அலைவரிசையானது ஏற்படுத்தப்பட்டதனூடாக நேத்ரா அலைவரிசையானது மேம்படுத்தப்பட்டு நல்லிணக்க நிகழ்ச்சி ஒலிபரப்புகளில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி நிலைபேறான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதன் மூலம் வளமான இலங்கையை உருவாக்க முடியுமென தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களின் சங்கம்

(கொழும்பு)

எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் ஊழியர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் தற்காலிக ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில், பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர்களால் 2016.07.27 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்ட வேலைநிறுத்தம் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் தங்களால் கையெழுத்திட்டு வழங்கப்பட்ட உடன்பாட்டுக் கடிதத்தின் அடிப்படையில் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

மேற்கண்ட உடன்பாட்டிற்கு இசைவாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உயர்மட்ட பதவிகள் நிரப்பப்படுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமை என்பவற்றோடு அப்பதவிகள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளில் காணப்படும் சீரற்ற தன்மையை நிவர்த்தி செய்யும்படி எம்மால் வழங்கப்பட்ட அழுத்தத்தை கவனத்திற் கொள்ளாத தன்மையைக் காண முடிகின்றது.

எனவே, கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்ற அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 24 தொழிற்சங்கங்கள் ஒருங்கிணைந்த குழுவின் விசேட சந்திப்பின் போது நீண்ட கலந்துரையாடலின் முடிவில் பின்வரும் முடிவு எடுக்கப்பட்டது.

எவற்றுக்கும்முடிவு கிடைக்காத நிலையில் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அச்சங்கம் அறிவித்துள்ளது. (இ-7)

# நாடாளுமன்றத்தில் பிரதமருடன் முக்கிய சந்திப்பை நடத்திய ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று முன்தினம் முக்கிய சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் மதியம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன் போது அமைச்சரவை மறுசீரமைப்பு மற்றும் சமகால அரசியல் நிலவரம் என்பன தொடர்பில் பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அமைச்சர்களான மலிக் சமரவிக்ரம மற்றும் கபீர் ஹாஸிம் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சந்திப்பின் அடிப்படையில் அமைச்சரவை மறுசீரமைப்பு பிற்போடப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# ரயில்வே சட்டங்களை மீறியவர்களுக்கு நடந்த கதி

## ரூ.20 மில்லியன் அபராதம்

(கொழும்பு)

ரயில்வே திணைக்கள பயணச்சீட்டு பரிசோதகர்களினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனைகளின் போது, ரயில்வே சட்ட திட்டங்களுக்கு மாற்றமான முறையில் ரயில்களில் பிரயாணம் செய்த பலர் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து 20 மில்லியன் ரூபாவை அபராதத் தொகையாகத் திரட்ட முடிந்ததாக, ரயில்வே வாணிப அத்தியட்சகர் ஜீ.டபிள்யூ. சிசிர குமார தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இறுதிப் பகுதி வரை கொழும்பு உள்ளிட்ட பல்வேறு ரயில்வே வலயங்களில் 14809 சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், தொடர்ந்தும் இவ்வாண்டும் திடீர்ப் பரிசோதனைகள் விரிவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பற்றுச்சீட்டு வாங்காமல் பயணித்தமை, மூன்றாம் வகுப்பு பற்றுச்சீட்டுடன் முதலாம், இரண்டாம் வகுப்புப் பெட்டிகளில் பயணித்தமை, பற்றுச்சீட்டு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் பயணித்தமை போன்ற குற்றங்களுக்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டு குறித்த அபராதத் தொகை பெறப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரயில்வே திணைக்கள வருமானத்தைப் பெருக்கும் நோக்கில், ரயில்வே அபராதத் தொகைகளும் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன. 2,500 ரூபாவாக இருந்த அபராதம், 3 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் ரயில்வே வாணிப அத்தியட்சகர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# ஒரு வருடமாக பாடசாலைக்கு செல்லாது ஊர் சுற்றித் திரிந்த 14 வயது மாணவி

## கைது செய்யப்பட்டு சிறுமிகள் காப்பகத்தில் ஒப்படைப்பு

(கொழும்பு)


பெற்றோரின் எச்சரிக்கையையும் மீறி ஊர் சுற்றித் திரிந்த 14 வயது நிரம்பிய மாணவியொருவரை, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் பெண் பொலிஸாரின் துணையுடன் கைது செய்து, பதுளை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர் செய்தனர்.

நீதிபதி நயந்த சமரதுங்க அம்மாணவியை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை பண்டாரவளையிலுள்ள சிறுமிகள் காப்பகமொன்றில் தடுத்து வைக்கும்படியும், அன்றைய தினம் இம் மாணவி குறித்த பூர்வாங்க அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் மற்றும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இம் மாணவி பாடசாலைக்கு செல்வதாகக் கூறி கடந்த ஒரு வருடமாக பாடசாலைக்கு செல்லாமல் ஊர் சுற்றித் திரிந்துள்ளார். மாணவி பாடசாலைக்கு வராமை குறித்து அதிபர், ஆசிரியர்கள் மாணவியின் பெற்றோரிடமும் வினவியுள்ளனர். இதனையடுத்து பெற்றோர் மாணவியைக் கண்டித்தும் எச்சரித்தும் எப்பயனும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் இது தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டது. இதன் பின்னரே, இம் மாணவி கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இத்தாலி மாகாண தேர்தலில் இலங்கையர் போட்டியிடுகிறார்




(கொழும்பு)

இத்தாலியில் எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் லெம்பார் மாகாண சபைத் தேர்தலில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் அந்த நாட்டின் பிரதான கட்சியின் வேட்பாளராக போட்டியிடவுள்ளார்.

நயினாமடு பிரதேசத்தைச் சேர்ந்த நெரஞ்சன் வாஸ் என்ற இந்த இலங்கையர் இத்தாலியில் குடியுரிமை பெற்று மிலான் நகரில் வசித்து வருகிறார்.

இந்த நிலையில், இத்தாலியின் பிரதான அரசியல் கட்சியான ஜனநாயகக் கட்சியின் சார்பில் வேட்பாளராக போட்டியிடவுள்ளார்.

இத்தாலியிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள், வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் சமயம் சார்ந்த பொதுச் சேவையில் ஈடுபட்டு வரும் நெரஞ்சன் வாஸ் கடந்த 35 ஆண்டுகளாக மிலான் நகரில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முஸ்லிம் அரச ஊழியர்களுக்கான சலுகையை தடையின்றி வழங்குங்கள்

## அமைச்சர் றிசாத் பணிப்பு



(கொழும்பு)

அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12பிரிவின் 12:1 உபபிரிவின் மீளமைக்கப்பட்ட சுற்று நிருபத்தின் பிரகாரம், அரசாங்க நிறுவனங்களில் பணிபுரியும் முஸ்லிம் ஊழியர்கள் வெள்ளிக் கிழமைகளில் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றவென வழங்கப்பட்ட விசேட சலுகைக்கு வழிவிட வேண்டுமென அரச நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவை வழங்குமாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் அந்த அமைச்சின் செயலாளரை பணித்துள்ளார்.

'முஸ்லிம் அரச ஊழியர்கள் வெள்ளிக்கிழமைகளில், தமது மதக் கடமைகளை அனுஷ்டிக்கும் வகையில் 12 மணி தொடக்கம் 2 மணி வரை வழங் கப்பட்ட விசேட விடுமுறைக்கு அனுமதியளிப் பதற்கு சில அதிகாரிகள் மறுப்புத் தெரிவிப்பதாகவும் எனவே அவர்களுக்கு வழங்கப்பட்ட இந்த விசேட சலுகைக்கு இடமளித்து, மதக் கடமைகளை சீராக நிறைவேற்றுவதற்காக அதிகாரிகளுக்கு மீண்டும் சுற்று நிருபம் தொடர்பில் அறிவுறுத்துமாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் அந்த அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றின் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ள முஸ்லிம் அரச அலுவலர்கள் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகை நேரத்தில் தமது கடமையை ஒழுங்காக நிறைவேற்ற முடியாமல் இருப்பதாகவும் அரச அதிகாரிகள் இதற்கு அனுமதி மறுப்பதாகவும் அமைச்சர் றிசாத் பதியுதீனிடம் முஸ்லிம் அரச ஊழியர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்தே, அமைச்சர் இந்தக் கடிதத்தை அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு எழுதியுள்ளார்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஜும்ஆத் தொழுகை மிகவும் கட்டாயக் கடமை எனவும் எனவே, அவர்களின் மதக் கடமைகளை அனுஷ்டிக்கும் வகையில் அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு ஏற்கனவே வழங்கிய சலுகையை சில அதிகாரிகள் மறுக்கின்றனர் எனவும், வேறு சில அதிகாரிகள் இந்த விடயத்தில் மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வருவதால், முஸ்லிம் அரச ஊழியர்கள் வேதனை அடைந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், தனியார் துறையினரும் முஸ்லிம்களின் சமய வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்த விசேட சலுகையைவழங்குவதை உறுதிப்படுத்துமாறும் அமைச்சர் கோரியுள்ளார். (இ-7)

# புகையிரதத்தின் மீது கல்வீச்சு தாக்குதல் சந்தேக நபருக்கு விளக்கமறியல் உத்தரவு

(திருமலை)

புகையிரதம் மீது கல்வீச்சு நடத்தி அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சந்தேக நபரை எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி வரையில் விளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி இரவு திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த தபால் புகையிரதம் முன் பாய்ந்து யுவதியொருவர் தற்கொலை செய்து கொண்ட பின்னர் கோபமடைந்த அவரது உறவினர்கள், கிராமத்தவர்கள் புகையிரதம் மீது கல்வீச்சு தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்களை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை பிரதான சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் பாலையூற்று பாடசாலை வீதியைச் சேர்ந்த மஹதுன்சுகன்ராஜ்(30 வயது) என தெரிய வருகின்றது.

குறித்த புகையிரதத்திற்கு கல்வீச்சு தாக்குதல் நடத்தியமையினால் ஒரு இலட்சத்து 940 ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக புகையிரத கட்டுப்பாட்டு திணைக்களம் தெரிவித்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (இ-7)

# வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு

(கொழும்பு)

வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு இளைஞர் முயற்சியாண்மை அபிவிருத்தித் திட்டத்தினூடாக வேலைவாய்ப்பு வழங்கவுள்ளதாக சர்வோதய நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஜே.எம். தஜ்மீல் தெரிவித்தார்.

வேலையற்ற இளைஞர்களின் திறன்களை விருத்தி செய்து சொந்த வியாபார நிறுவனங்களை உருவாக்குதலும் விரிவாக்கம் செய்தலும் எனும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சர்வோதய நிறுவனத்தினால் இவ் இளைஞர் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் நடை முறைப் படுத்தப்படவுள்ளது.


இத் திட்டத்தில் இணைந்து கொள்ள ஆர்வமுடைய 18-35க்கு இடைப்பட்ட வயதுகளையுடைய இளைஞர், யுவதிகள் மேலுள்ள சர்வோதய மாவட்ட காரியாலயங்களிலும் அல்லது www.sarvodaya.org, www.sarvodayafinance.lk எனும் இணையத்தளங்கள் ஊடாகவும் sarvodaya.srilanka எனும் முகநூல் பக்கத்தில் இருந்தும் விண்ணப்பப் படிவங்களை பெற்று மார்ச் 22 க்கு முன்பு விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இத் திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு ஜே.எம். தஜ்மீல் 076 661 2131, 011 264 7159 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலமாக பெற்றுக் கொள்ள முடியும். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1338

Search for people, places and things Nagendram Home

### ரம்யா

மக்களுக்கு தங்கள் உண்மையான சக்தி தெரியாது



### ராணி


வரதட்சணை வாங்குவது தப்புன்னு முன்னாடி சொன்னீங்க, இப்ப சரின்னு சொல்றீங்களே, ஏன்?



அப்ப என் பொண்ணுக்குக் கல்யாணம்...
இப்ப என் பையனுக்குக் கல்யாணம்...

### ரக்ஷிதா

இயற்கையை தூக்கி எறிந்துவிட்டு செயற்கை மோகத்தில் சிக்குகின்றோம்



### காயா

உண்மையிலேயே கோழியினால்தான் முட்டை வந்தது... எப்படி?



ஒருமுறை ஹோட்டலுக்குப் போய் கோழி பிரியாணி ஓடர் செய்தேன். கூடவே முட்டையும் வந்தது. இன்னொரு நாள் போய் முட்டை பிரியாணி ஓடர் செய்தேன் ஆனால் அதோடு கோழி வரவில்லையே...

### யாமினி

உடை குறைந்தால் "பஷன்"
எடை குறைந்தால் "ரேஷன்"



நாங்களும் தத்துவம் சொல்லுவோம்ல...

### யாழினி

கட்ட அவுத்து விடுங்கடா



இனிமேல் திருடமாட்டேன்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்கும் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–146

## வேலை தேடுபவராக இல்லாது உருவாக்குபவராகுங்கள்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!


இலங்கைத்தீவில் பல்வகை வளங்கள் நிறைந்திருக்கின்றன. அவற்றை நாம் முறையாக இனங்கண்டால் அவற்றை பாதுகாப்பதுடன் நாம் வினைத் திறனாக பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். இவ்வாறாக கிடைத்தற்கரிய வளங்களை முறையாக நாம் இனங்கண்டால் வேலையற்றிருக்கும் பலருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளவும் முடியும். அரச உத்தியோகம் தான் நல்ல உத்தியோகம் என பலரும் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். தனியார் துறையிலும் சிறப்பான பல வேலைவாய்ப்புக்கள் உண்டு. அதன்மூலம் அதிகரித்த வருமானத்தை பெறவும் முடியும். எமது மனதில் மாற்றமொன்றை கொண்டு வருவோமாயின் இதற்கான பதில் இலகுவாகக் கிடைக்கும்.

த்ற்போதைய காலகட்டத்தில் படித்தவர்கள் பலரும் வேலை தேடுவதனை ஒரு தொழிலாக்க் கொண்டிருப்பதனைக் காணலாம். தாங்கள் கற்ற கல்விக்கேற்ப வேலை கிடைக்க வேண்டும் என அங்கலாய்க்கின்றனர். அனைவருக்கும் அரச உத்தியோகம் கிடைக்கக்கூடியளவிற்கு அரச இயந்திரத்தினால் வேலையை உருவாக்கிக்கொள்ள முடியாது.

மாறாக உங்களால் செய்யக் கூடிய விருப்பமான துறையில் வேலையொன்றை தெரிவு செய்து தனியார்துறை வேலையாக உருவாக்கிக் கொள்ளலாம். வருமானந் தரும் தொழிற்றுறையை எடுத்த மாத்திரத்தில் உடனடியாகவே உருவாக்கிக்கொள்ள முடியாது.

“சிறுகக் கட்டிபெருகவாழ்” என அழுத்தமாக நமது முன்னோர்கள் எடுத்துரைக்கின்றார்கள். எந்த தொழிற்றுறையையும் ஆரம்பத்தில் சிறியளவாக ஆரம்பித்து விட்டு அதனை செயற்படுத்தும் போது பல்வகை இடர்களையும் தடங்கல்களையும் தாண்டி தொழிற்றுறையை இழுத்துச் செல்ல வாய்ப்புக் கிட்டும். சிறியளவில் ஆரம்பிக்கும் போது அதிகரித்த மூலதனம் தேவைப்படாது. பாரிய திட்டங்களும் தேவைப்படாது. இன்னும் நிபுணர்களின் கூற்றுப் படி அதற்கு மதிநுட்பமும் தேவையில்லை.

அனுபவம் தானே வாழ்க்கை. சிறியதாக ஆரம்பிக்கின்ற தொழிலை அனுபவத்தினடிப்படையில் மெதுவாக தேவை கருதி பெருக்கிக் கொண்டே செல்லலாம். தொழிலை பெருக்கும் போது அதற்கான மூலதனங்களின் கிடைதன்மை, வேலையாட்களின் தேவை மற்றும் தொழிற்றுறைக்கான மேலதிக நிதி




எவ்வற்றினை அலசியாராய்ந்து அவற்றின் கிடைதன்மையை உறுதி செய்து கொண்டு மேற்கொண்டு தொழிற்றுறையை பெருக்கிக்கொள்ளலாம்.

தனியார் தொழில் என்னும் போது எந்த தொழிலை உருவாக்கலாம் என பலரும் வினவுவது தெரிகின்றது. தொழிலை உருவாக்குவதென்றால் அந்த தொழிலால் உருவாக்கப்படும் பொருட்களுக்கான சந்தையை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

மக்களுக்கு தேவையானது எது என்பதனை மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும். கேள்வி அதிகமில்லாத பொருளுக்கு முக்கியத்துவத்தைக் கொடுப்பதைத் தவிர்த்து மக்கள் அதிகம் விரும்பும் பொருட்களை உற்பத்தி செய்வதை கருத்தில் கொண்டால் உங்களது தொழில் சிறக்கத் தொடங்கி விடும். பாவனையாளர்களின் கருத்துக்களை அவ்வப்போது பெற்றுக் கொண்டால் தங்களது தொழிலின் மூலமாக உற்பத்தியாகும் பொருளைப் பற்றிய தவறுகளையும் உற்பத்தி முறைகளிலுள்ள தவறுகளையும் சரி செய்து கொள்ளலாம்.

தனியார் தொழிலினை தொடங்கும் போது களநிலமையினை முழுமையாக ஆராய்ந்து விட்டு ஆரம்பித்தல் நல்லது. அதன் மூலம் துணிவாகவும் எந்தவித சலனமோ நம்பிக்கையீனமோ இன்றிதொடங்கிக் கொள்ளலாம். எமது விளைநிலத்தில் உருவாகின்ற பல தாவரங்களை நாம் மூலப்பொருட்களாக பயன்படுத்தலாம். அதிலும் முற்றாக பயன்படுத்தக் கூடியதாக நம் தேசத்து மூலிகைத்தாவரங்கள் அமைகின்றன.

இவற்றுடன் நாம் அதிகம் பயன்படுத்தாத தாவரங்கள் (Under utilized plants) இவற்றையும் நாம் மூலாதாரமாகப் பயன்படுத்தலாம். தொழிற்றுறைக்கான முயற்சியின் போது எந்த தொழிலில் உங்களுக்கு விருப்பமிருக்கின்றதோ அல்லது எந்த தொழிலை இலகுவாக நீங்கள் நம்பிக்கையுடன் செய்ய முடியும் என நினைக்கின்றீர்களோ அதனை தெரிந்தெடுத்து முயற்சி செய்யலாம். ஒரு தொழிலை வேண்டா வெறுப்பாக கடமைக்காக செய்ய முனைய வேண்டாம்.

எமது பிரதேசத்தில் பலவகையான தொழிற்றுறைகள் நாம் உருவாக்கக்கூடியனவாகும். சுற்றுலாத்துறை விருத்தியடையும் போது இன்னும் இந்த துறைகள் பலவற்றுக்கு அது அடிகோலும் எனக் கருதலாம். சுற்றுலாத்துறைக்காக பல இணை சேவைகள் உருவாக்கப்படல் வேண்டும். அவற்றில் சுத்தமான சுதேசிய உணவு, தங்குமிடவசதி அதாவது இயற்கையுடனான தங்குமிட வசதி, பாரம்பரிய மருத்துத்தினை பெறுவதற்கான வைத்தியசாலைகள், இன்னும் எமது வாழ்வியல், பாரம்பரியம், கலை, கலாசாரம் இன்னும் விழுமியங்களை எடுத்துச் சொல்வதற்கான கலைகளடங்கிய நிகழ்வுகள், அரங்க நிகழ்வுகள், பாரம்பரிய மேளம், பறை இன்னும் பாரம்பரியமான விளையாட்டுக்கள் என அனைத்துக்கும் வரவேற்பிருக்கும். இவற்றைக் கருத்திற் கொண்டு தொழிற்றுறை விருத்திக்கான வழி வகைகளை கண்டுபிடிக்கலாம். சந்தையில் அதிக வரவேற்பிருக்கும் பொருட்கள் பற்றிய ஆய்வொன்றை செய்யுங்கள், எதற்கு அதிக முக்கியத்துவம் பாவனையாளர்கள் கொடுக்கின்றார்கள் என அடையாளப்படுத்துங்கள். அதன்மூலம் நீங்கள் முனைப்புடன் செயற்படக்கூடிய விருப்பமாக செய்யக்கூடிய தொழிலைக் கண்டுபிடித்து விடலம்.

ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள வளங்களை குறிப்பாக பௌதீகவளம், மனித வளம் இன்னும் ஏனைய வளங்கள் அனைத்தையும் முழுமையாக அளவிட்டு அதன் மூலம் நீங்கள் செய்யக்கூடிய தொழிற்றுறையை ஆரம்பிக்கலாம்.

தொழிலில் போட்டியேற்படுவது இயற்கை. ஆனால் போட்டியே நிரந்தரமானதாக மாறக்கூடாது.

அவ்வாறாயின் தொழிலை முழுமையாக முனைப்புடன் முன்னேற்றகரமானதாக செய்ய முடியாமல் போய்விடும். உங்களுக்கான வேலைக்காக தினமும் தவம்கிடக்கும் நிலையை மாற்றி நீங்களும் ஒரு தொழில் தருநராக தொழிற்றுறையை உருவாக்கி பலருக்கு வேலை கொடுங்களேன். உங்கள் முடிவுகளை தீர்மானங்களை மாற்றி யோசித்துப் பாருங்கள். உங்களுக்குள்ளும் ஒரு தொழில் விற்பன்னர் ஒளிந்திருக்கின்றார். அந்த சக்தியை வெளிக் கொணருங்கள். உங்களுக்குள் ஏற்படும் மாற்றத்தையும் நீங்கள் உணரத் தலைப்படுவீர்கள்.



குருநகர் சென்ஜேம்ஸ் வித்தியாலயத்தின் மகிழகம் திறப்பு விழா கடந்த 20ஆம் திகதி வித்தியாலய அதிபர் சு.கலியுகன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பி.தயானந்தன் கலந்து கொண்டார். (படங்கள்:-குருநகர் செய்தியாளர்)

## எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஆஸியிலிருந்து
# நாடு கடத்தப்பட்ட சாந்தரூபனிடம் நான்கு மணித்தியாலங்கள் விசாரணை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரியிருந்த சாந்தரூபன் என்ற ஈழ அகதி அங்கிருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கையை வந்தடைந்ததாக தகவல் வெளியானது. கிடைக்கப்பெற்ற அதிகாரபூர்வ தகவல்களின்படி, நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இவர் இலங்கையை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இவரை அதிகாரிகள் விசாரணைக்கு அழைத்துச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி சாந்தரூபனை அவரது குடும்பத்தினர் சந்திப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டினை தமிழ் அகதிகள் பேரவை கே.எஸ். ரத்னவேல் என்ற சட்டத்தரணியை முன்னிறுத்தி மேற்கொண்டுள்ளது.

இதனிடையே சாந்தரூபன் நான்கு மணித்தியாலங்கள் விசாரணைகளுக்குப் பின் குடும்பத்தாருடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளி என குறிப்பிடப்பட்ட சாந்தரூபன் கடந்த 2012ஆம் ஆண்டு கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவைச் சென்றடைந்தார் என்றும் இராணுவ அச்சுறுத்தல் காரணமாகவே இவர் இவ்வாறு சென்றதாகவும் சொல்லப்பட்டது.

பின்னர் அங்கு சில ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய குடிவரவுத் துறையினர் சாந்தரூபனைக் கைதுசெய்து நாடு கடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

சாந்தரூபன், விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியில் படகு கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு சர்வதேச எதிர்ப்புக்களின் மத்தியில் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா அவரை நாடு கடத்தியது.

அவர் நாடுகடத்தப்பட்டால் கடுமையான ஆபத்தில் சிக்கக்கூடும் என அவுஸ்திரேலியாவில் செயற்படும் தமிழ் அகதிகள் மையம் கவலை தெரிவித்திருந்தது.

இதேவேளை தான் நாடு கடத்தப்பட்டால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் நேரும் என சாந்தரூபன் ஐ.நா. அகதிகள் பேரவையிடம் புகார் தெரிவித்திருந்தார்.

இதன்படி அவரது புகார் பரிசீலனையில் இருப்பதால் அவரை நாடுகடத்த வேண்டாம் என மேற்படி பேரவை அவுஸ்திரேலியாவைக் கோரியிருந்தது.

இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையிலேயே அவர் நாடுகடத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இந்திய மீனவர்கள் 20 பேரை விடுதலை செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 20 பேரை விடுதலைச் செய்ய கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர் அனுமதி வழங்கியுள்ளார் என அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கமைய சட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர், 20 மீனவர்களும் விடுதலை செய்யப்படவுள்ளனர் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில், எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில், இந்திய மீனவர்கள் 129 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 109 பேர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். மீதமுள்ள 20 பேரே இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர். (இ-7)

# போதுமான அரிசி கையிருப்பில்

(கொழும்பு)

நாட்டிற்குத் தேவையான போதுமான அரிசி கையிருப்பில் காணப்படுவதாக சதொச மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பெரும்போக அரிசி தற்சமயம் சந்தைக்குக் கிடைக்கின்றது. இதற்கு மேலதிகமாக இறக்குமதி செய்யப்பட்ட அரிசியும் சந்தையில் காணப்படுகின்றது. இதனால் புதிதாக அரிசி இறக்குமதி செய்யப்பட மாட்டாது என்று சதொச நிறுவனத்தின் தலைவர் மொஹமட் றிஸ்வான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்முறை பெரும்போகத்தில் 6 இலட்சம் ஹெக்டேயர் விஸ்தீரணமான நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரதமரைப் பதவி நீக்கும் நடவடிக்கை இடைநிறுத்தம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்குவது குறித்து உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கம் கோரும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பிரதமரை பதவி நீக்குவது தொடர்பில் உச்ச நீதிமன்றின் சட்ட விளக்கத்தை கோருவதற்கு முன்னதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டிருந்தார்.

இந்த தீர்மானத்தை ஜனாதிபதி கைவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களின் ஆலோசனைகளுக்கு அமைய ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

19ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் ஜனாதிபதியை பதவி நீக்குவது குறித்து, பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன.

19ஆம் திருத்தச் சட்டத்தின் 46ஆம் சரத்தின் அடிப்படையில் பிரதமரை பதவி நீக்க முடியும் என வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வரும் நிலையில் சட்ட விளக்கம் கோருவதனை தவிர்த்துக் கொள்ளுமாறு, சிரேஷ்ட ஆலோசகர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதன் அடிப்படையில் சட்ட விளக்கம் கோரும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்-ஆளுநர் தகவல்

(ஏறாவூர்)



கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளின் மேலும் ஒரு தொகுதியினர் ஆசிரியர் சேவைகளுக்குள் உள்வாங்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 385 பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி வழங்கப்படவுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் இவ் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஆராயும் விசேட உயர்மட்ட கூட்டம் நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம். உதயகுமார், முதலமைச்சரின் செயலாளர், கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இதன் போது குறித்த நியமனங்கள் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. (இ-7)

# பெருந்தோட்ட பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 450 மில்லியன்



(கொழும்பு)

பெருந்தோட்ட பாடசாலைகளின் உடனடி தேவைகளை கருத்தில் கொண்டு அந்த பாடசாலைகளின் நடவடிக்கை அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு 450 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட பாடசாலைகள் அபிவிருத்தி தொடர்பில் கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே கல்வி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அபிவிருத்தி திட்டம் கல்வி அமைச்சின் பெருந்தோட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி பிரிவினால் முன்னெடுக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர், கல்வி அமைச்சின் கட்டட அபிவிருத்திக்கு பொறுப்பான பணிப்பாளர் கலாநிதி அபேசுந்தர, சிறந்த பாடசாலை அபிவிருத்தி திட்ட பணிப்பாளர் பத்மநாதன், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், கல்வி அமைச்சின் பெருந்தோட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி பணிப்பாளர் திருமதி சபாரஞ்சன் மற்றும் கல்வி அதிகாரிகள், பொறியியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வழக்கிலிருந்து விடுவிக்குமாறு கோத்தபாய வேண்டுகோள்

(கொழும்பு)

தனக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டிருக்கும் வழக்கிலிருந்து தன்னை விடுதலை செய்யுமாறு கோரி முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று மறுபரிசீலனை மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

அவன்காட் நிறுவனத்திற்கு சொந்தமான ஆயுதக் கப்பலை காலி துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கு அனுமதி வழங்கியதன் மூலம் அரசுக்கு 11.4 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தியமை தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட சிலருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த வழக்கிலிருந்து தன்னை விடுவிக்குமாறு முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீள் பரிசீலனை மனு சமர்ப்பித்துள்ளதுடன் குறித்த மனுவின் பிரதிவாதியாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மது அருந்துவதை தடுக்க வலியுறுத்தி போராட்டம்

(கொழும்பு)

பதுளை - ஸ்பிரிங்வெளி தோட்டப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

ஸ்பிரிங்வெளி - கோட்டே கொட பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சி ஒன்றுக்கு அருகில் மது அருந்துவதை தடுக்க வலியுறுத்தி இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் வைத்து தோட்ட முகாமையாளரும், உதவி முகாமையாளரும் நேற்று முன்தினம் தாக்கப்பட்டுள்ளனர்.

நீர்வீழ்ச்சிக்கு அருகில் மதுபானம் அருந்தி குழப்பத்தில் ஈடுபட்ட சிலரை எச்சரித்தமைக்காகவே அவர்கள் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நகரில் ஒதுக்குப்புறமாக அமைந்துள்ள இந்த நீர்வீழ்ச்சிக்கு அருகில் சுற்றுலா பயணிகளாக வருகின்றவர்கள் மதுபானத்தை அருந்தி விட்டு, தோட்ட மக்களுக்கும் மாணவர்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் நிலைமை தொடர்ந்தும் இடம்பெறுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறாது தடுக்குமாறு கோரி பொது மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தை நடத்தி இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)





# யானை தேடிய நட்பு

(நேற்றைய தொடர்ச்சி)

"யானையாரே, நீர் ஆசைப்படுவது வினோதமாக உள்ளது. என் திறமைக்கு முன்னால் நீங்கள் எல்லாம் பூஜ்யம். தள்ளிப் போங்கள்" என்று தோகையை ஆட்டிக் கொண்டே சென்று விட்டது.

அப்போது ஓர் எலி வந்தது. உடனே தன் கோரிக்கையை வைத்தது யானை.

"யானையாரே, உம்மோடு நட்புக் கொள்ள எனக்கும் ஆசைதான். ஆனால் நம் இருவருக்கும் உருவ வேறுபாடு மலைக்கும் மடுவுக்குமாக உள்ளது. நீங்கள் என்னைப் போல உருவத்



தைச் சிறியதாக்கிக் கொண்டு வந்தால் அப்போது நட்புக் கொள்ளலாம்" என்றது எலி.

சட்டென்று புதரிலிருந்து வெளியே வந்தது ஒரு புலி. அதன் பிடியில் குரங்கு மாட்டிக்கொண்டு உயிருக்குப் போராடியது. அதன் வேதனைக் குரலைக் கேட்ட யானை ஓடிவந்து புலியுடன் போராடியது. யானையின் பலத்தை புலியால் சமாளிக்க முடியவில்லை. யானை புலியைத் தூக்கி வீசியது.

"என்னை விட்டு விடு. இனி நீ இருக்கும் பக்கமே வரமாட்டேன்" என்று சொல்லி விட்டுத் தலைதெறிக்க ஓடி மறைந்தது புலி. அதுவரை மறைவில் நின்று வேடிக்கை பார்த்த குரங்கு, மயில், குயில், எலி எல்லாம் வெளியில் வந்தன. "யானையாரே, எங்களை மன்னிக்க வேண்டும். நாங்கள் தங்களை மிகவும் இழிவாகப் பேசி விட்டோம். இந்தப் புலியால் பலர் உயிரை இழந்துள்ளார்கள். தக்க சமயத்தில் புலியிடமிருந்து எங்களைக் காப்பாற்றியதுடன் எங்களுடைய கர்வத்தையும் அழித்துவிட்டீர்" என்று உருக்கமாகப் பேசியது குரங்கு. "என்னையும் மன்னித்து விடுங்கள். ஆபத்து காலத்தில் உதவுவதுதான் நல்ல நண்பனுக்கும் உண்மையான நட்புக்கும் இலக்கணம்" என்றது மயில்.



"யானையாரே, உம்மை நண்பராக அடைவதற்கு நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்றது குயில்.

தனக்கு நண்பர்கள் கிடைத்த மகிழ்ச்சியை அவர்களோடு கொண்டாடி மகிழ்ந்தது யானை.

முற்றும்.




- 1387- நேப்பில்ஸ் மற்றும் ஹங்கேரி மன்னன் மூன்றாம் சார்ல்ஸ் கொல்லப்பட்டான்.
- 1582-கிரெகொரியின் நாட்காட்டி பாப்பரசர் 13வது கிரெகரியினால் அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1739-இந்தியாவின் முகலாய மன்னன் முகமது ஷாவின் படையை ஈரான் மன்னன் நாதிர் ஷாவின் படை முறியடித்தது.
- 1826-பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கும் பர்மா மன்னன் ஆவாவுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டினை அடுத்து முதலாம் பர்மியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1875-அவுஸ்திரேலியக் கிழக்குக் கரையில் எஸ். எஸ். கோத்தன்பேர்க் என்ற கப்பல் மூழ்கியதில் 102 பேர் கொல்லப்பட்டனர்.
- 1881-சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1918-எஸ்தோனியா விடுதலையை அறிவித்தது.
- 1920-நாசிக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1969- மரைனர் 6 விண்கலம் செவ்வாய் கோளுக்கு ஏவப்பட்டது.
- 1999-கிழக்கு சீனாவில் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 61 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007- மணிப்பூர் தமெல்லாங் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
- 2009- வாட்ஸ்அப் (WhatsApp) நிறுவனம் ஜான் கௌமால் கலிபோர்னியாவில் தொடங்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1886- ஆர் முத்தையா, தமிழ்த் தட்டச்சுப்பொறியை உருவாக்கிய இலங்கை-சிங்கப்பூர்த் தமிழர்
- 1948- ஜெ. ஜெயலலிதா, கன்னட-தமிழக நடிகை, தமிழ்நாட்டின் 16ஆவது முதலமைச்சர் (இ. 2016)
- 1955- ஸ்டீவ் ஜொப்ஸ், ஆப்பிள் நிறுவனத்தை ஆரம்பித்த அமெரிக்கத் தொழிலதிபர் (இ. 2011)

### இறப்புகள்

- 2015- ஐ. மாயாண்டி பாரதி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், பொதுவுடைமையாளர், இதழாளர் (பி. 1917)
- 1810-என்றி கேவண்டிசு, பிரான்சிய-ஆங்கிலேய இயற்பியலாளர், வேதியியலாளர் (பி. 1731)
- 1983-ச. வெள்ளைச்சாமி, தமிழக சமூக ஆர்வலர், கொடை வள்ளல் (பி. 1897)
- 1986-ருக்மிணிதேவி அருண்டேல், தமிழக நடனக் கலைஞர், கலாசேத்திரா நடனப் பள்ளியினை நிறுவியவர். (பி. 1904)
- 2001-கிளாட் சேனன், அமெரிக்கக் கணிதவியலாளர், பொறியாளர் (பி. 1916)
- 1815-ராபர்ட் புல்டன், அமெரிக்கப் பொறியியலாளர் (பி. 1765)

### சிறப்பு நாள்

- விடுதலை நாள் (எசுத்தோனியா, (1918)
- பெண்கள் நாள் (சரத்துஸ்திர சமயம் ஈரான்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 50 | 45 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 70 | 80 | 80 |
| தக்காளி | 20 | 30 | 30 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 40 | 80 | 60 |
| கரட் | 100 | 100 | 110 | 100 | 150 |
| பூசணி | 60 | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 80 | 70 | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 160 | 100 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 100 | 110 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 40 | 100 | 120 |
| கருணைக்கிழங்கு | 40 | 100 | 45 | 60 | 60 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 200 | 140 | 200 | 200 |
| பீற்றூட் | 30 | 40 | 30 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 70 | 80 | 150 | 120 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 400 | 600 | 800 |
| போஞ்சி | 120 | 120 | 80 | 80 | 200 |
| கத்தரிதம்புள்ளா | 60 | 30 | 65 | 60 | 60 |
| கீரை -1பிடி | 40 | 10 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 30 | 75 | 100 | 40 |
| தேங்காய்(ஒன்று) | 90 | 100 | 30-80 | 100 | 75 |
| இராசவள்ளி | 180 | 200 | 140 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 120 | 20 | 80 | 80 | 120 |
| முள்ளங்கி | 30 | 60 | 30 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 45 | 40 | 10 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 40 | — | 80 | 80 |

மடியிலே கனம் இருந்தால்
வழியிலே பயம் இருக்கும்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இரகசிய வாக்கெடுப்பை கண்டு பதறுவது ஏன்?

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதும் தவிசாளர்களை நியமிப்பதும் தொடர்பில் இழுபறி நிலை இன்னமும் தொடர்ந்த வண்ணமுள்ளன.

பிரதேச மற்றும் மாநகர சபைகள் இயங்குவதற்கு நாம் ஆதரவு கொடுக்கலாம். ஆனால் சபையின் தலைவர் அல்லது மேயர் யார் என்பது தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் சபை உறுப்பினர்களிடம் உள்ளது.

தான் சார்ந்த கட்சியின் உறுப்பினர் ஒருவர் தவிசாளராக அல்லது முதல்வராக வருவதை விரும்பாத உறுப்பினர்களும் இருக்கின்றனர்.

இந்நிலையில் ஜனநாயக அடிப்படையில் தவிசாளரை அல்லது முதல்வரைத் தெரிவு செய்வதற்கு இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதே பொருத்தமானது என்ற கருத்து உறுப்பினர்களிடம் உள்ளது.

எனினும் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மிகவும் இறுக்கமாக இருக்கிறது.

இரகசிய வாக்கெடுப்பை நடத்தினால் ஒரு உறுப்பினர் தனது மனச்சாட்சிக்கு அமைவாகத் தனது வாக்கை அளிக்க முடியும்.

அதாவது இரகசிய வாக்கெடுப்பில் பிறருடைய தலையீடோ அன்றி அரசியல் கட்சிகளின் ஆதிக்கமோ செல்வாக்குச் செலுத்த முடியாது.

மாறாக, ஓர் உறுப்பினர் எந்தவிதமான கட்டுப்பாடுகளுமின்றி சுயாதீனமாக இயங்கக் கூடிய வாய்ப்பு இரகசிய வாக்கெடுப்பிலேயே சாத்தியமாகும்.

இருந்தும் இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை எனும்போது,

தனது கட்சி உறுப்பினர்கள் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்பது இங்கு தோன்றாய் எழுவாய் போல மறைந்து நிற்கிறது.

இதுதவிர, கட்சித் தலைமையால் நியமிக்கப்பட்ட தவிசாளர் அல்லது முதல்வர் தொடர்பில் அந்தக் கட்சி உறுப்பினர்களுக்கு உடன்பாடு இல்லை என்ற உண்மையும் இங்கு தொக்கி நிற்பதை உணரமுடியும்.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நியமனங்கள் கட்சி உறுப்பினர்களுடன் ஆராய்ந்து அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி செய்யப்படவில்லை என்பதும்,

மாறாக கட்சித் தலைமையில் இருக்கக் கூடிய ஒரு சிலர் தமக்குத் தேவையானவர்களையும் தமக்கு எப்போதும் விசுவாசமாக இருப்பவர்களையும் தமக்காக முன்னர் சில பல குழப்பங்களைச் செய்தவர்களுக்கு நன்றிக்கடனாகவும் தவிசாளர் மற்றும் முதல்வர் பதவிகளை வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலுமே கூட்டமைப்பின் தலைமை செயற்பட்டுள்ளமை இங்கு புரிதற்குரியது.

அட, வடக்கு மாகாண சபையில் இரகசிய வாக்கெடுப்புத் தேவை என்றவர்கள் இப்போது உள்ளூராட்சி சபைகளில் பகிரங்கமான வாக்கெடுப்புத் தேவை எனக் கேட்பது, கலியுகத்தின் பண்பாடு போலும்.

# தாமரை மொட்டால் தமிழீழம் மலரும் என சம்பந்தன் கூறியது தவறு

## இலங்கை மக்கள் தேசிய கட்சி தெரிவிப்பு

(வவுனியா)

மகிந்த ராஜபக்ஷவின் தாமரை மொட்டு மலர்ந்தால் தமிழீழம் மலரும் என சம்பந்தன் ஐயா கூறியிருப்பது, தவறான விடயம் என இலங்கை மக்கள் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் என்.விஸ்ணுகாந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் பங்காளி கட்சியான இலங்கை மக்கள் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் என்.விஸ்ணுகாந்தன், தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது சமஷ்டி சர்வதேச விசாரணை நீதி என கூறிக்கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றியதாகவே நாங்கள் கருதுகிறோம்,

மகிந்த ராஜபக்ஷவின் தாமரை மொட்டு மலர்ந்தால் தமிழீழம் மலரும் என சம்பந்தன் ஐயா கூறியிருப்பது தவறான விடயம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது அபிவிருத்தியை தாண்டி கொள்கைக்கு வாக்களியுங்கள் என மக்களுக்கு தெரிவித்திருந்தார்கள்.

ஆனால் தங்களுடைய கொள்கை என்ன மக்களுக்கு எதை சொல்ல விரும்புகிறார்கள் என கேள்வி எழுப்பினார்.

பிணை முறி விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை மற்றும் பிரதமரணிலை காப்பாற்ற பிணை முறி விசாரணையை சுமந்திரன் தடுத்து நிறுத்தியுள்ளார் என குற்றஞ்சாட்டினார்.

கொள்கைக்கு வாக்களிக்க கூறுபவர்கள் பாராளுமன்றத்தினூடாக தங்களுக்கு தேவையானவற்றை பெற்றுக்கொண்டு தமிழ் மக்கள் மீது கரிசனை அற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் அபிவிருத்தி என்பது ஒரு படி தாண்டவில்லை, ஆனால் முஸ்லிம் அரசியல்வாதிகளின் கைகள் வடக்கு கிழக்கில் ஓங்கியிருப்பதுடன், அவர்களின் அபிவிருத்தியும் எல்லை தாண்டியுள்ளது.

எங்களுடைய கொள்கை தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொடுப்பதாகவே இருக்கிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சர்வதேச தமிழ் மக்களையும் ஏமாற்றுகிறது.

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீடமைப்பு திட்டங்கள் கூட தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை.

எமது கட்சியால் வடகிழக்கில் இருக்கிற அனைத்து தமிழ் மக்களின் பிள்ளைகளுக்கு கல்வி வளர்ச்சிக்கு உதவிகள் செய்யப்படும்.

சமஷ்டி வரும், சர்வதேச விசாரணை வரும், தீர்வு வரும் என தமிழ் தலைமைகள் தெரிவிக்கிறார்கள். அது எப்போது வரும் என தெரிவிக்கிறார்கள் இல்லை.

வடமாகாணத்திற்கு அபிவிருத்திக்கு கொடுக்கப்படும் பணம் திருப்பி அனுப்பப்படுகிறது எனவும் குற்றஞ் சாட்டினார்.

தியத்தலாவ வெடிப்பு சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவித்த விஸ்ணுகாந்தன் வடமாகாணத்திலிருந்து புலிகளின் ஆயுதங்கள கடத்தப்பட்டு தென்னிலங்கையில் விற்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் சரியான விசாரணை செய்து பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்தார். (ம)

## தேசிய ஒலிம்பிக் குழு தலைவராக சுரேஸ் சுப்பிரமணியம் தெரிவானார்

9 வருடங்களின் பின்னர் நேற்று நடைபெற்ற தேசிய ஒலிம்பிக் குழுவின் தேர்தல் நிறைவுக்கு வந்தது.

தேசிய ஒலிம்பிக் குழுவின் புதிய தலைவராக சுரேஸ் சுப்பிரமணியம் 6 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற தேசிய ஒலிம்பிக் குழுவின் தேர்தலில் அவருக்கு ஆதரவாக 18 விளையாட்டு சங்கங்கள் வாக்களித்துள்ளன.

தலைவர் பதவிக்கு போட்டியிட்ட ரொஹான் பெர்னாண்டோவிற்கு ஆதரவாக 12 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தேசிய ஒலிம்பிக் குழுவின் செயலாளராக மெக்ஸ்வெல் டி சில்வா தெரிவாகியுள்ளார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மதியம் 5 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** சுதந்திரபுரம், குட்டியபுலம், நவக்கிரி, நிலாவரை, இராச வீதி, சிறுப்பிட்டி மேற்கு, கலைமகள், ஆவரங்கால், வாதரவத்தை, பெரியபொக்கணை, புத்தூர், ஊறணி, வீரவாணி, ஊர்காவற்றுறை சந்தி, ஊர்காவற்றுறை வைத்திய சாலை பிரதேசம், செபஸ்தியார் கோவிலடி, மெலிஞ்சி முனை, கரம்பன், இருதய ஆண்டவர் கோவிலடி, தம்பாட்டி, ஊர்காவற்றுறை நீதிமன்ற கட்டடத் தொகுதி ஆகிய இடங்களிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** பூதர் மடம், கோப்பாய் சந்தி, மானிப்பாய் வீதி, கைதடி வடக்கு, இருபாலை சந்தி, இருபாலை பழைய வீதி, வட்டக்குளம், கட்டைப்பிராய், கல்வியங்காடு, இலங்கை நாயகி, கல்வியங்காடு சந்தி, ஆடிய பாதம் வீதி, நாயன்மார் கட்டு, இராமலிங்கம் வீதி, முடமாவடி கிளி கடை சந்தி, GPS றோட், கோப்பாய் பொலிஸ், பாற். பண்ணை, திருநெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, பலாலி வீதியின் ஒரு பகுதி, தாவடி சந்தி, தாவடி மானிப் பாய் வீதி, தாவடி பாடசாலை வீதி, வன்னியசிங்கம் வீதி, கொக்குவில் சந்தி, ஆடியபாதம வீதி, கோவில் வீதி, பொற்பதி, வளாக வீதி, பிரம்படி, மாவடி, மருத்துவ பீட பிரதேசம் (திருநெல்வேலி சந்தி வரை), கருவப்புலம் வீதி, கருவேலடி வீதி, யாழ். மருத்துவ பீடம், யாழ். மருத்துவ பீட அரங்கம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** கௌதாரி முனைப் பிரதேசம், அறிவியல்நகர், வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, குமுழமுனை, மாஞ்சோலை வைத்தியசாலை, முல்லைத்தீவு விமானப் படை-I மற்றும் II, முல்லைத்தீவு 59 வது படைப்பிரிவு (14 ESR-01 மற்றும 14 ESR-02), SFHQ வற்றாப்பளை, குமுழமுனை பல நோக்கு கூட்டுறவுச்சங்க அரிசி ஆலை, 12 VIR இராணுவ முகாம், 16 ESR இராணுவ முகாம், MAS Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாய பீடம், Farm House, North Cargill's Agri foods ஆகிய பிரதேசங்களிலும மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**மனை சாஸ்திரத்தில் உச்சம் நீச்சம் என்ன?**

உச்சம்: தென்மேற்கு மூலை உயர்ந்திருப்பது

நீச்சம்: வடகிழக்கு மூலை தாழ்ந்திருப்பது.

**சந்திர ஸ்தானம், சூரிய ஸ்தானம் என்றால்?**

மனையின் தெற்குப் பகுதியும் மேற்குப் பகுதியும் இணைந்து உருவாகும் முக்கோண பகுதி சந்திர ஸ்தானம் ஆகும்.

மனையின் கிழக்குப் பகுதியும் வடக்குப் பகுதியும் இணைந்து உருவாகும் முக்கோண பகுதி சூரிய ஸ்தானம் ஆகும்.

*(தொடரும்)*

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- தெய்வத்தைப்பற்றி பேசும்போது பசியால் நலிந்து வாழும் மக்களிடையே பேசுவதால் எந்த பயனும் இல்லை. அது அவர்களை அவமதிப்பது போல் ஆகும். பசித்தவனிடம் ஆன்மிகம் பேசி பயனில்லை.
- மனிதனிடம் தெய்வீக சக்தி ஒளிந்து கிடக்கிறது. அதைவெளிக்கொண்டு வருவது தான் லட்சியமாக இருக்க வேண்டும்.
- முதலில் நாம் தெய்வங்களாவோம். பின்னர் பிறரை தெய்வங்களாக்கும் முயற்சியில் ஈடுபடுவோம். "ஆகுக", "ஆக்குக" என்பதே நமது குறிக்கோள்.
- நீதி நூல்களின் லட்சியம் சுயநலமின்மையே. பிறருடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு சிந்திப்பது சிங்கத்திற்கு சமமான ஆற்றலை இதயத்திற்கு தருகிறது.
- நல்ல லட்சியத்தைத் தேர்வு செய்து மனவுறுதிடன் வீரனாக இருங்கள், மனிதனாகப் பிறந்திருக்கிறீர்கள், வாழ்ந்து மறைந்த பிறகு ஒரு அழியாத அறிகுறியை விட்டு செல்லுங்கள். உறுதியுடன் செயற்படுங்கள்.

# இலங்கையுடனான படுதோல்வி மீள அழைக்கப்படுகிறார் மஷ்ரபே



சர்வதேச இருபது-20 தொடரி லிருந்து ஓய்வு பெற்ற மஷ்ரபே மோர்டசாவை பங்க ளாதேஷ் கிரிக்கெட் வாரியம் மீண்டும் இருபது-20 தொடரில் விளையாட அழைக்கிறது.

பங்களாதேஷ் அணி சமீப த்தில் நடைபெற்ற முத்தரப்பு தொடர், டெஸ்ட் மற்றும் இருபது-20 தொடர்என அனை த்திலும் தோல்வி முகத்தை சந்தித்தது. இதனால் சர்வ தேச இருபது-20 போட்டிக ளிலிருந்து ஓய்வு பெற்றுள்ள பங்களாதேஷ் அணியின் ஒருநாள் போட்டிகளுக்கான தலைவர் மோர்டசாவை இருபது-20 போட்டிக்கு திரும்பு மாறு பங்களாதேஷ் கிரிக் கெட் வாரியம் தெரிவித்து ள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் கூறு கையில், இலங்கை, இந் தியா மற்றும் வங்கதேசம் ஆகிய அணிகள் பங்கேற் கும் முத்தரப்பு தொடர் இல ங்கையில் நடைபெறவுள் ளது.

இதற்காக வீரர்கள் தெரிவு செய்யும் கூட்டம் நடை பெற் றது. அப்போது இருபது-20 தொடரிலிருந்து ஓய்வு பெற்று ள்ள மோர்டசா அணிக்கு திரும்பினால், நன்றாக இருக் கும் என்று அணியின் தேர் வாளர்கள் கூறினர். ஏனெ னில் சமீபகாலமாக சிறப்பாக செயற்பட்டு வந்த வங்கதேச அணி, நடந்து முடிந்த தொடர் களில் மிக மோசமான தோல்வி களை சந்தித்துள்ளது. அதும ட்டுமன்றி அணியின் சீனியர் வீரர்களான சகிப் அல் ஹசன் போன்றவர்கள் காயம் காரண மாக விலகியுள்ளனர்.

இதனால் அணியை வழி நடத்திச் செல்ல நல்ல அனு பவம் வாய்ந்த வீரர் தேவை என்பதால், அவர் அணிக்கு திரும்ப வேண்டும் என்று எண்ணுகிறோம். ஆனால் இந்த விடயத்தில் அவரை கட் டாயப்படுத்தவில்லை, அவர் விருப்பப்பட்டால் மகிழ்ச்சி யாக வரவேற்பதாக கூறியுள்ளார்.(க)

# கலைவாணி விளையாட்டுக்கழக காற்பந்தாட்ட போட்டி முடிவுகள்

நாவாந்துறை கலை வாணி விளையாட்டுக் கழ கம், யாழ்ப்பாணம் கால் பந்தாட்ட லீக்கின் அனுமதி யுடன் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை கடந்த 2 ஆம் திகதி முதல் தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வரு கின்றது.

மொத்தம் 32 அணிகள் இந்தச் சுற்றுப்போட்டிக்கு உள்வாங்கப்பட்டுள்ளதுடன், அணிகள் ஏ, பி என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள், வில கல் முறையில் நடைபெற்று வருகின்றன.

வேலணை துறையூர் ஐய னார் அணியை எதிர்த்து அரியாலை மத்தி விளை யாட்டுக்கழகம் மோதியது. இதில் ஐயனார் அணி, 04:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

திக்கம் இளைஞர்கள் அணியை எதிர்த்து இள வாலை சென்.ஹென்ஸ் அணி மோதியது. போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன.

சமநிலை தவிர்ப்பு உதை யில் திக்கம் அணி, 04:03 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

விண்மீன் அணியை எதிர த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி மோதியது. இதில் விண்மீன் அணி 03:01 என்ற கோல்கள் கணக் கில் வென்றது. (க-26)

# மோசமான சாதனையை பதிவு செய்தார் சாஹல்



தென்னாபிரிக்காவில் நடை பெற்ற 2வது இருபது-20 போட்டியில், இந்திய சுழற் பந்து வீச்சாளர் சாஹல் 64 ஓட்டங்களை விட்டுக் கொடு த்து மோசமான சாதனையை பதிவு செய்துள்ளார்.

இந்தியா மற்றும் தென் னாபிரிக்க அணிகள் மோதிய 2வது இருபது-20 போட்டி, தென்னாபிரிக்காவின் செஞ் சூரியனில் நடந்தது.

இதில், இந்திய அணி நிர்ணயித்த 189 ஓட்டங்கள் இலக்கை, தென்னாபிரிக்க அணி 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து இலக்கை அடைந்தது.

ஒருநாள் தொடரில் சிறப் பாக பந்து வீசிய சாஹல், இந்தப் போட்டியில் சொதப் பினார். 4 ஓவர்கள் வீசிய சாஹல் 64 ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார்.

ஒரு ஓவருக்கு சராசரி யாக 16 ஓட்டங்களை விட்டுக் கொடுத்துள்ளார். இதில் 2 பவுண்டரி, 7 சிக்சர்கள், ஒரு அகலப்பந்து அடங்கும். அவர் நான்கு பந்துகளில் மட்டுமே ஓட்டங்கள் விட்டுக் கொடுக்க வில்லை.

இதன் மூலம், அதிக ஓட்ட ங்களை விட்டுக் கொடு த்த, இந்திய பந்து வீச்சாளர் என்ற மோசமான சாத னையை பதிவு செய்துள் ளார். இதற்கு முன்பு, ஜோகி ந்தர் சர்மா 4 ஓவர்களில் 57 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்ததே மோச மான சாதனையாக இருந் தது என்பது குறிப் பிடத்தக்கது. (க)

# நான்கு முறை டக் அவுட் ரோகித் சர்மா சாதனை



இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் அதிக முறை டக் அவுட்டான இந்திய வீரர் என்ற மோசமான சாதனையை ரோகித் சர்மா படைத்துள்ளார்.

இந்தியா - தென்னாபி ரிக்கா அணிகள் இடையில் நடைபெற்ற இரண்டாவது இருபது-20 போட்டியில் இந் திய துடுப்பாட்ட வீரர் ரோகித் சர்மா டாலாவின் முதல் பந்திலேயே அவுட்டாகி கோல் டன் டக் அடித்தார்.

இது இருபது-20 கிரிக் கெட்டில் அவரது 4-வது டக் அவுட் ஆகும். இதையடுத்து இருபது-20 கிரிக்கெட்டில் அதிக டக் அவுட் ஆன இந்திய வீரர் என்ற மோசமான சாத னையை ரோகித் சர்மா படைத்துள்ளார்.

யூசுப் பதான், ஆஷிஷ் நெஹ்ரா ஆகியோர் இருபது-20 போட்டிகளில் 3 முறை டக் அவுட்டான வீரர்கள் என்ற பெயருக்கு சொந்தகாரர்க ளாக இருந்த நிலையில் சர்மா அதை முறியடித்துள்ளார்.(க)

# வீரர்களின் போர் நேற்று ஆரம்பம் மகாஜன-ஸ்கந்தவரோதயா மோதல்











தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூ ரிக்கும் இடையில் நடைபெ றும். வீரர்களின் போர் துடுப் பாட்டப் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை மற்றும் இன்று சனிக்கிழமை கிழமை தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்று வருகின்றது.

இவ்வாண்டு நடைபெறவு ள்ள வீரர்களின் போர் துடுப் பாட்டப்போட்டி 18 ஆவது கிரிக்கெட் சுற்றுப் போட்டி யாகும்.

நடந்து முடிந்து 17 ஆண்டு கால வீரர்களின் பேரில் மகாஜனக் கல்லூரி 5 போட்டி களிலும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 4 போட்டிகளிலும் வெற்றி வாகை சூடினர். எட்டுப் போட்டிகள் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந் தன. இம்முறை போட்டி மிகவும் விறுவிறுப்பாகவும் சுவாரஸ்யம் மிக்கதாகவும் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது.

இரண்டு அணி வீரர் களின் ரசிகர்களும் அணி வீரர்களை உற்சாகப்படுத்தும் முகமாக தாள வாத்தியங் களை இசைத்து பார்வை யாளர்களை மகிழ்விப்பது குறிப்பிடத்தக்க விடயமா கும். (க-105)

## ஆஸ்துமா நோயி...

ரியர் ஒருவர் தனது உயிரை மாய்த்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

திருநெல்வேலி கிழக்கு பகுதியை சேர்ந்த வியாபாரியும் 9 பிள்ளைகளின் தந்தையுமான கந்தையா சீவரட்ணம் (வயது 59) என்பவர், நேற்று முன்தினம் இரவு சுவாசிப்பதற்கு முடியாமல் சிரமப்பட்டுள்ளார். நேற்று அதிகாலை தொடர்ச்சியாக இருமிய வண்ணம் சுவாசிக்க முடியாமல் இருந்த காரணத்தினால் உறவினர்கள் அவரை உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். அவரை பரிசோதித்த மருத்துவர் குறித்த நபர் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தார்.

இதேவேளை கொக்குவில் மேற்கை சேர்ந்த சுப்பிரமணியம் நடராசா (வயது 85) என்பவர் நேற்று காலை சுவாசிக்க முடியாமல் சிரமப்பட்டுள்ளார். ஏற்கெனவே இவர் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டிருந்துள்ளார். நேற்று காலை உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலும் சண்டிலிப்பாய் மத்தியை சேர்ந்த 4 பிள்ளையின் தந்தையும் இளைப்பாறிய ஆசிரியருமான ராமன் சின்னத்தம்பி வயது 78 என்பவர் ஆஸ்துமா மற்றும் இருதய வியாதியால் பாதிக்கப்பட்டிருந்துள்ளார்.

நேற்று காலை, நோய் காரணமாக தன்னால் உயிர்வாழ முடியாது என கடிதம் எழுதி வைத்துவிட்டு கல்வளை என்ற இடத்தில் உள்ள வயல்கிணற்றில் விழுந்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

மேற்குறித்த மூவரும் ஆஸ்துமா மற்றும் இருதய வியாதியால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்கள் என பரிசோதனையில் தெரிய வந்துள்ளது. இந்த மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர்மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (மு-9)

## தாயின் பணத்தை...

நிலையில், கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர் மல்லாகம் நீதவான் ஏ.யூட்சன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார். விடயம் குறித்து கேட்டறிந்துகொண்ட நீதவான், சந்தேக நபரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேக நபர், தாய் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து மறைத்து வைக்கப்பட்ட 90 ஆயிரம் ரூபா பணத்தினை திருடியுள்ளார். இதன் பின்னர் சம்பவம் குறித்து தாயாரினால் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. பெற்றுக்கொண்ட முறைப்பாட்டுக்கமைவாகவே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (ம)

## அரசின் மீதான...

ள்ளார்.

வியங்கொடை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

அரசாங்கம் முன்னெடுத்து வரும் சில வேலைத்திட்டங்களை ஒரு சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை.

இதன் காரணமாகவே சிலர் வெற்றியும், சிலர் தோல்வியும் பெற்றனர்.

அடுத்த தேர்தலில், அவற்றுள் மாற்றங்கள் ஏற்படும் எனவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம)

## அரசாங்க கொள்கை...

ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுடன் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் புதிய தலைமைத்துவ தலைமுறை உருவாக்கப்பட உள்ளது.

உருவாக்கப்படும் தலைமைத்துவ தலைமுறையினரிடம் கருத்துக்களை பெற்று மக்கள் வழங்கியுள்ள ஆணைக்குள் தேவையான திருத்தங்கள், முன்னெடுக்கப்பட வேண்டிய வேகம், புதிதாக செயற்படுத்தப்பட உள்ள விடயங்கள் குறித்து கலந்துரையாட எண்ணியுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தையில், சஜித் பிரேமதாச, அகில விராஜ் காரியவசம், நவீன் திஸாநாயக்க, சாகல ரத்நாயக்க, ஹர்ச டி சில்வா, ஹரின் பெர்னாண்டோ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ம)

## புதிய அமைச்சரவை...

என்று ஜனாதிபதி உறுதிபட தெரிவித்துள்ளார்.

மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களை விசேட செயற்திட்ட அமைச்சர்களாக ஒதுக்கி விட்டு இளையவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

எனினும் தாம் அவ்வாறு ஒதுக்கப்பட்டால் ஜனாதிபதியின் நிலைப்பாட்டின் பிரகாரம் ஊழல் செயற்பாடுகள் தொடர்புபட்டிருப்பதன் காரணமாக அமைச்சுப் பதவிகள் தங்களுக்கு வழங்கப்படவில்லை என்று பொது மக்கள் பிழையான அபிப்பிராயம் கொள்வதற்கு வழியேற்படும் என்று ஐ.தே.க.வின் மூத்த அமைச்சர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இவ்வாறாக அமைச்சரவை மாற்றம் காரணமாக ஐக்கிய தேசியக்கட்சிக்குள் வெடித்துள்ள உட்கட்சிப் பூசல் பெரும் கலகமாக மாறிக்கொண்டிருப்பதாக அக்கட்சியின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம)

## அமைச்சரவை மாற்றம்...

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன பின்னடைவைச் சந்தித்தன. அதனால் கூட்டு அரசைத் தொடர்வதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பின்னடித்தது.

இந்த நிலையில் அமைச்சரவையில் பெரியளவு மாற்றத்தைச் செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணக்கத்துக்கு வந்தனர்.

இந்நிலையில் அமைச்சரவை நாளை ஞாயிற்றுக்கிழமை மாற்றமடையவுள்ளது.(ம)

## ஆட்சி அமைக்க...

யோக பூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

அக்கலந்துரையாடலில் சில முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது. அதாவது வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 40 சபைகளில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு தனிப்பெரும் கட்சியாக உள்ளது என்றும் அவ்வாறு முன்னிலை பெற்ற சபைகளில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சபைகளில் உள்ள ஏனைய தமிழ் கட்சிகளின் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவை பெற்று ஆட்சி அமைப்பதற்கு ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான தேவை ஏற்படின் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு அவர்களின் ஒத்துழைப்புடன் நிர்வாகத்தை கொண்டு செல்வதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக மீண்டும் கலந்துரையாடப்படுவதாகவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பின்னடைவுக்கான காரணங்கள் என்ன என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளனர்.

இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்த சந்திப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.சுமந்திரன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ரெலோ அமைப்பின் செயலாளர் ந.ஸ்ரீகாந்தா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் (ஜனா) கருநாகரன் புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்தன், புளொட் அமைப்பின் உறுப்பினர் ஆர்.ராகவன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (மு-9)

# ராஜிதவிடமிருந்து பறிபோகும் சுகாதார அமைச்சர் பதவி

(கொழும்பு)

சுகாதார அமைச்சுப் பதவியில் மாற்றம் ஏற்படுத்த ஜனாதிபதி விரும்பினால் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

களுத்துறை பொது மருத்துவமனையில் நேற்று நடைபெற்ற வைபவமொன்றில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

வைபவத்தின் பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த அவர், சுகாதார அமைச்சு தவிர வேறு அமைச்சொன்றை பொறுப்பேற்கும் உத்தேசம் தனக்கு இல்லை என்று வலியுறுத்தியுள்ளார்.

எனினும் ஜனாதிபதி சுகாதார அமைச்சுப் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பினால் அதற்கு இணங்கி வேறு அமைச்சுப் பதவியொன்றை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்போது செய்தியாளர் ஒருவர் சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக் கொள்வீர்களா? என்று கேட்டதற்கு தற்போதைக்கு தனக்கு உள்ள அமைதியை கெடுத்துக் கொள்ள விருப்பமில்லை என்றும் தெரிவித்துள்ளார்.(ம)

## முக்கிய அமைச்சர்...

சிறிசேனவிடம் கூறியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலையடுத்து கூட்டு அரசின் இரண்டு பிரதான பங்காளிக் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட உக்கிரக்கட்டப் பனிப்போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில், அமைச்சரவையில் அதிரடி மாற்றங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றுள்ள பேச்சுகளில் அமைச்சரவை மாற்றத்துக்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

கூட்டு அரசின் இணக்கப்பாட்டு உடன்படிக்கையின் பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சுப் பதவிகளை ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியின் அமைச்சுப் பதவிகளை சுதந்திரக் கட்சியும் தமக்குள் மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும்.

இரு தரப்புக்குமிடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள கலந்துரையாடல்களின் பிரகாரம் சட்டம் ஒழுங்கு, நெடுஞ்சாலைகள், நிதி, விளையாட்டு, விவசாயம், நீர் வழங்கல், விஞ்ஞான தொழில்நுட்பம் உள்ளிட்ட அமைச்சுகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (ம)

## நல்லாட்சி அரசு...

பார்க்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

ஹொரணை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம)

## கச்சதீவு செல்ல...

தோணியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று ஆரம்பமாகியிருக்கும் நிலையில் கச்சதீவுக்குச் செல்வதற்காக பக்தர்கள் குறிகாட்டுவான் இறங்குதுறையில் படகுக்காக காத்திருந்தனர். (ம)

## ஐ.தே.க அமைச்சர்களுடன்...

விக்கிரமசிங்க சந்தித்தார்.

இதன்போதே நாட்டைக் கட்டியெழுப்ப அபிவிருத்தி முன்மொழிவுகளை பிரதமர் கோரினார்.

அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளை ஆராய அமைச்சர்கள் குழுவும் பிரதமரால் நியமிக்கப்பட்டது.

இதேவேளை, புதிய அமைச்சரவையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கப்படும் அமைச்சர்களின் விவரங்கள் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## அத்துமீறி நுழையும்...

க்கை எடுக்கப்படும் எனவும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு மீன்பிடி படகுகள் தொடர்பில் அமைச்சர் மகிந்த அமரவீர கடந்த மாதம் சமர்ப்பித்த பிரேரணைக்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த சட்டமூல சரத்தின் அடிப்படையில், எதிர்காலத்தில் இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிநாட்டு மீனவர்களின் மீன்பிடிப் படகுகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கையும், பாரிய அபராதத் தொகையும் விதிக்கப்படும்.

அதன்படி 15 லட்சம் ரூபா முதல் ஒரு கோடி 50 லட்சம் ரூபா வரை தண்டப்பணம் விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இந்திய-இலங்கை...

மாநாடும் கண்காட்சியும் நேற்று வெள்ளிக்கிழமை கைதடியில் அமைந்துள்ள சித்தமருத்துவ அலகில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் சித்தமருத்துவம் என்பது, மருத்துவத்துறை மாத்திரம் அன்றி மனவளக்கலை, யோகா சார்ந்த கலைகளையும் உள்ளடக்கியது. யாழ்ப்பாணத்தில் சித்தமருத்துவ துறையில் மிக ஆர்வத்துடன் மாணவர்கள் இருப்பதனை அவதானிக்க முடிகிறது.

இந்தியாவில் இருந்து 100 மருத்துவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்துள்ளார்கள். ஒரு ஆய்வினை முழுமையாக செய்து முடிப்பதற்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட வேண்டும்.

இருப்பினும் சித்த மருத்துவ துறை தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதில் அது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

மேலும் சித்த மருத்துவ துறை சார்பாக இந்திய-மலேசிய ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளோம். அதன் மூலம் அதிக நன்மைகளை பெற்றுள்ளோம். அதே போன்று இலங்கை -இந்திய ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

ஏனெனில் இங்கு தயாரிக்கப்படும் மருந்துகள் இலங்கை தர சான்றிதழுடனேயே தயாரிக்கப்படுகிறது. ஆனால் இவ்வாறான வெளிநாட்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் வெளிநாடுகளுக்கும் இங்குள்ள உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடியும். பல்வேறு நன்மைகளை பெற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கும்.

மேலும் சித்தமருத்துவத்துறையில் மேற்படியினை மேற்கொள்வதற்கு இங்கு வசதிகள் மற்றும் ஆர்வம் குறைவாகவுள்ளது. சிலர் பல்கலை பட்டம் பெற்றவுடனேயே தமது கல்வியை நிறுத்திவிடுகிறார்கள். ஆனால் மேற்படிப்புகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு ஆண்டும் 5 மாணவர்களை மேற்பட்டப்படிப்புக்கு தயார் செய்ய வேண்டியது அவசியம் ஆகும்.

மேலும் இலங்கையில் முதல் முதலான சித்த மருத்துவ கல்லூரியில் இந்த சர்வதேச ஆய்வு மாநாடு இடம்பெறுகிறது. இந்த சர்வதேச ஆய்வு மாநாடு வரலாற்றில் பொறிக்கக்கூடிய வகையில் சிறப்பாக இடம்பெறும் என மேலும் தெரிவித்தார். (மு-9)

## வவுனியா பட்...

நிலையப் பொறுப்பதிகாரி எஸ். அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.15 மணியளவில் நடைபெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பட்டாணிசூர் இரண்டாம் வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் வீட்டார் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வீட்டினை பூட்டி விட்டு உறவினர் வீட்டிற்கு சென்றிருந்த வேளை வீட்டின் கதவினை மாற்றுச் சாவியை பயன்படுத்தி திறந்து உள் நுழைந்த திருடர்களால் வீட்டில் இருந்த அலுமாரி உடைக்கப்பட்டு அதனுள் வைக்கப்பட்டிருந்த சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 9 பவுண் தங்க நகையைத் திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், பிற்பகல் வேளை வீடு திரும்பிய வீட்டார் வீட்டின் கதவு திறக்கப்பட்டுள்ளதை அவதானித்து விட்டு வீட்டினுள் சென்று பார்த்தபோதே தங்க நகைகள் களவாடிச் சென்றமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, உடனடியாக அவசர பொலிஸ் சேவைப் பிரிவு தொலைபேசியிலக்கமான 119க்கு அழைப்பினை ஏற்படுத்தி திருட்டுச் சம்பவம் தொடர்பாக தகவலைத் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் அவசர பொலிஸ் சேவைப் பிரிவினால் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற நெளுக்குளம் பொலிஸார் தடயங்களைச் சேகரித்ததுடன், முறைப்பாட்டினையும் பதிவு செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-15)

## உருளைக்கிழ...

யாகக் காணப்பட்ட விசேட வர்த்தக வரி நள்ளிரவு முதல் 30 ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடை நிறைவடைந்துள்ளதால் உருளைக்கிழங்கு செய்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் புதிய வரித்திருத்தம் எதிர்வரும் மார்ச் மாதம் 31-ம் திகதிவரை அமுலில் இருக்கும் எனவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

## இந்...

இந்திய பிரதமரும் பிரான்ஸ் ஜனாதிபதியும் இணைந்து இந்த அழைப்பை விடுத்துள்ளனர்.

இந்த அழைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரடியாக கையளிக்கப்பட்டதாக இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயம் விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக இந்த மாநாட்டில் 500 பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். அவர்களில் 30 அரச தலைவர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சூரிய சக்தி இணக்க ஒப்பந்தத்தில் 54 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. இலங்கை இந்த ஒப்பந்தத்திற்கு கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதியே கைச்சாத்திட்டது.

இந்த திட்டத்தின் கீழ் எதிர்வரும் 2030 ஆம் ஆண்டளவில் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களை, முதலீடாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. (ம)


**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**
UK – 550*/=Kg
கனடா – 1050*/=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-1566)

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
021 221 5656 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை | முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(C-1658)

**காணி விற்பனைக்கு**
புன்னாலைக்கட்டுவன் – சுன்னாகம் வீதியில் ஊரெழு அம்மன் கோவிலுக்கு அண்மையில் 25 பரப்பு 10 குழி கொண்ட தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777065366
பி.ப- 3.00 - 8.00
(2862)

**விற்பனைக்கு**
வடமராட்சி மந்திகை குரும்பகட்டி வயிரவர் கோயிலுக்கு அண்மையில் 5 அறைகள் கொண்ட 3 1/2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
077 843 5453
(2895)

ஜேர்மன் கப்பல் வேலைவாய்ப்பு
சிங்கப்பூர் ஹொட்டேல் வேலை
டுபாய், கட்டார், குவைத் வேலைவாய்ப்பு
சுவிஸ், அவுஸ்ரேலியா, கனடா நியூசிலாந்து, விசா ஏற்பாட்டுடன்






BUSINESS & Hotel Management
FAST TRACK – ENTRY LEVEL – DIPLOMA LEVEL
ஏற்கனவே பயிற்சி, அனுபவமுள்ளவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு
விபரங்களுக்கு 077 36 16 798
9வது ஆண்டில் 9th Year
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9 221 www.sikaram.lk
(C-1696)

**பணிப்பெண் தேவை**
வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 328 2051
(209)

அறிமுகம் – Rs. 250/=
**சிக்கன் பிரியாணி**
ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800
(C-1656)

**பதவிக்கான தேடல்**
நீங்கள் O/L தகைமை உடையவரா? எமது Dynamic Holding நிறுவனமானது தனது புதிய கிளைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இவ்வாண்டு ஆரம்பிக்கவுள்ளது.
● வயதெல்லை 18 - 30
● அனுபவம் அவசியமற்றது
● தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு
தொடர்பு: 077 157 1699
(C-1694)

Study in Singapore


EXPERT COUNSELING
Admissions & Visa Processing
8 மாத கற்கைநெறியுடன் கூடிய 6 மாத வேலை வாய்ப்பு
- Diploma in Hotel Management
- Diploma in Engineering Technology
- Diploma in Logistics & Supply chain Management
- Diploma in Network & Computer Technology
கல்வித் தகைமை: G.C.E (O/L) / G.C.E (A/L)
Next Intake April 2018
ics DREAM BEYOND BOARDERS Study Abroad
Admissions : 077 3013060
107, B 1/1 Galle Road, Colombo - 06
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
(C-1690)

**Techno World**
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)
A/L தொழில்நுட்ப பிரிவு
A/L செயல்முறை வகுப்புக்கள்
A/L 2020 வானிலை உபகரணங்கள் பார்வையிடல்
A/L 2019 தாவர பதிய முறை இனப்பெருக்கம்
A/L 2018 கோழி வளர்ப்பு
மேற்குறிப்பிட்ட செயன்முறை வகுப்புகளுக்காக மாணவர்கள் அனைவரும் திருநெல்வேலி, அச்சுவேலி ஆகிய இடங்களுக்கு கூட்டிச் செல்லப்படவுள்ளனர். அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம். அனுமதி இலவசம்
077 017 5346
(C-1693)

**Techno World**
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)
A/L தொழில் நுட்பபிரிவு
A/L 2017 இல் 60 மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமையுடன்

| Batch | E-Tec | B-Tec | SFT | SFT paper |
|---|---|---|---|---|
| 2020 | பட்வரைதல் குடிசார் எந்திரவியல் | வானிலை அளவீடுகள் | அளவீட்டு உபகரணங்கள் | அடிப்படை கணிதம் |
| 2019 | இயந்திரவியல் மின்னியல் | தாவர இனப் பெருக்கம் | சுழற்சி இயக்கம் | விசை |
| 2018 | இலத்திரனியல் Paper Class | பண்ணை பொறி முறைப் படுத்துகை | ஓட்ட மின்னியல் | வேலை, வலு, சக்தி |

Day Class, 2018 மாணவர்களுக்கு வாரநாட்களில் வகுப்புக்கள் நடைபெறும் ஒரே ஒரு தொழில்நுட்பபிரிவு கல்வி நிறுவனம். நேரம் : 8.00 - 12.00
Paper Class - எந்தவித கட்டணமும் அறவிடப்படுவதில்லை
தனிப்பாட அனுமதி உண்டு.
077 017 5346
(C-1693)


**61-வது பிறந்தநாள் நினைவலைகள்**



தோற்றம் 24 . 02 . 1957 மறைவு 01 . 12 . 2017

அமரர்

**சிங்காரவேலு யோகநாதன்**

(உரிமையாளர் - Ogesta)

எம் குடும்ப விருட்சத்துக்கு நேராக வேராக நின்று
நிழல் பரப்பி நாங்கள் வாழ்வாங்கு வாழ
வழியமைத்துவிட்டு நீவீர்
இன்று பாவிகளாய் எம்மை பதறவிட்டு
வைத்துவிட்டு பரந்தாமன் தாள் அடைந்துவிட்ட
எம் அன்புத் தெய்வத்தினை என்றும்
எம் மனத்துள் இருத்தி நினைந்துருகுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்: குடும்பத்தினர்

(2898)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.